# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



"நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே!"

"Well Done, Good and Faithful Servant!"


TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

November - December 2020
Volume : 60

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 4













# மண்டல வாரியாக நடைபெற்ற ஆண்கள் ஐக்கிய மாநில முகாம்




தேவ செய்தி
Rev. A. ஆபிரகாம் தாமஸ்
(தலைவர், தமிழ் பிரதேச ஏ.ஜி சபைகள்)













## ஆசிரியரிடமிருந்து........!

**"நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்"** (மத்தேயு 25:21).

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த ஆண்டின் கடைசி பகுதியில் நாம் வந்திருக்கிறோம். இந்த ஆண்டு நாம் எதிர்பார்த்த விதத்தில் காணப்படாவிட்டாலும் தேவன் தம்முடைய திட்டத்தை நிறைவேற்றி வருகிறார் என்பதில் சந்தேகமில்லை.

தேவன் நமக்கு அநேக ஆசீர்வாதங்களை தந்திருக்கிறார். அவைகளை நாம் எப்படி பயன்படுத்தினோம். எப்படி பயன்படுத்தப் போகிறோம் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது தொடர்பாக இந்த செய்தியில் உக்கிராணத்துவத்தைக் குறித்து (Stewardship) உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் உக்கிராணக்காரர்களாயிருக்கிறோம் (1பேதுரு 4:10; 1கொரி.4:2). உக்கிராணக்காரன் (Steward) என்றால் மற்றவர்களுடையதை பொறுப்பாகக் கவனித்து, பராமரித்து, நிர்வகித்து வருபவன். பிரியமானவர்களே, நீங்கள் இயேசுவின் பிள்ளைகளானால் நீங்களும், உங்களுடையவைகளும் இயேசுவுக்கு சொந்தமானவைகள். நம்முடைய நேரம், தாலந்துகள், பணம், சரீரம், குடும்பம் அனைத்தும் தேவன் நமக்கு அளித்தவைகள். இவைகளுக்காக நாம் தேவனுக்கு கணக்குக் கொடுக்க வேண்டும் (மத்தேயு 25:19; ரோமர் 14:12) இவைகளை நாம் எப்படி பராமரிக்கிறோம், கவனிக்கிறோம், பயன்படுத்துகிறோம் என்பதை பொறுத்துத்தான் இயேசுவின் வருகையின்போது அவர் நமக்கு அளிக்கும் பலன் (Reward) அமையும்.

### 1) உங்கள் நேரம் (TIME)

நேரம் தேவன் நமக்களித்த விலையுயர்ந்த பொக்கிஷம். நம்முடைய வாழ்நாள் குறுகினது (யோபு 14:1). ஆகவே காலத்தை வீணாக்காமல் அதை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் என்று வேதம் கூறுகிறது (எபேசியர் 5:16). ஒரு மனிதன் 75 வருடம் வாழ்ந்தால், சாதாரணமாக அவனுடைய நேரம் இப்படியாகச் செலவழிகிறது.

| | | |
|---|---|---|
| 23 வருடம் | - | தூக்கம் (31%) |
| 19 வருடம் | - | படிப்பு மற்றும் வேலை (25%) |
| 9 வருடம் | - | விளையாட்டு, பொழுதுபோக்கு, டி.வி. பார்த்தல்(12%) |
| 7.5வருடம் | - | ஆடை அணிதல், தனிப்பட்ட கவனம்(10%) |
| 6 வருடம் | - | சாப்பிடுதல் (8%) |
| 6 வருடம் | - | பயணம் செய்தல் (8%) |
| 0.5 வருடம் | - | ஜெபம், வேதவாசிப்பு, சபை (0.7%) |

நம்முடைய ஆண்டவர் நம் அனைவருக்கும் ஒரே அளவு நேரம் கொடுத்திருக்கிறார். அதை நம்மில் எத்தனை பேர் நித்தியத்தை முன்வைத்துச் செலவிடுகிறோம்? நம்முடைய நேரத்தை திட்டமிட்டு செலவிட வேண்டும். முதலாவது தேவனுக்கு நேரம் கொடுக்க வேண்டும்-ஜெபம், வேத வாசிப்பு, ஊழியம், ஆராதனை போன்றவைகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். நம்முடைய குடும்பத்திற்கு தரமுள்ள நேரம் கொடுக்க வேண்டும். நம்முடைய படிப்பு, வேலை, புத்தகம் வாசித்தல், ஓய்வெடுத்தல் போன்றவற்றிற்கு நேரத்தை திட்டமிட வேண்டும். பக்தி விருத்தியற்ற காரியங்களில் நேரத்தை வீணாக்குவதை தவிர்க்க வேண்டும். நம்முடைய நேரத்தை எப்படி பயன்படுத்தினோம் என்று தேவன் கணக்குக் கேட்பார் (2 கொரி. 5:10).

### 2) உங்கள் தாலந்துகள் (TALENTS)

எஜமான் திரும்பி வந்து, அவர்களிடத்தில் (தாலந்துக்களை குறித்து) கணக்கு கேட்டான் என்று வேதம் கூறுகிறது (மத்தேயு 25:19). தேவன் நமக்கு நம்முடைய திறமைக்குத்தக்கதாக தாலந்துகளைப் பகிர்ந்துகொடுக்கிறார் (மத்தேயு 25:15). ஒரு தாலந்துமே இல்லாத ஒருவரும் இந்த உலகில் இல்லை. முதலாவது, உங்கள் தாலந்து என்ன என்பதை கண்டுபிடிக்க வேண்டும். பாடல், இசை, பிரசங்கம், உதவி செய்தல், தனித்தாள் ஊழியம், விருந்தோம்பல், ஓவியம் வரைதல், புத்தகம் எழுதுதல் போன்ற பல்வேறு தாலந்துகளை தேவன் நமக்கு தந்திருக்கிறார். இவைகளை நாம் தேவ நாமம் மகிமைப்படும்படி பயன்படுத்த வேண்டும். அதை பயன்படுத்தாமல் புதைத்து வைத்தால் அதை இழந்துபோவோம். தேவனுடைய கோபத்துக்குள்ளாவோம் என்று வேதம் கூறுகிறது (மத்தேயு 25:24-30). கர்த்தர் தந்த தாலந்துகளை பயன்படுத்துவோமானால் இன்னும் அதிகமான தாலந்துகளை தந்து நம்மை ஆசீர்வாதமாக மாற்றுவார் (லூக்கா 19:24-26; லூக்கா 8:16). தாலந்துகளை மற்றவர்களின் பிரயோஜனத்திற்காக, தேவநாம மகிமைக்காக, தேவராஜ்ஜியத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்துவதில் உண்மையாயிருங்கள். கர்த்தர் தரும் பலனை நிச்சயம் பெறுவீர்கள் (மத்தேயு 25 : 23).

### 3. உங்கள் பணம் (TREASURES)

"எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்தில் வாங்கி உமக்குக் கொடுத்தோம்" என்று தாவீது கூறுகிறார் (1நாளா.29:14). நம்முடைய பணமும் பொருளும் தேவன் நமக்குக் கொடுத்தவைகள். அவற்றை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பது குறித்து தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும். இயேசு போதித்த 36 உவமைகளில் 18 உவமைகள் நாம் எப்படி பணத்தைக் கையாள வேண்டும் என்பதைக் குறித்ததாகும். சுவிசேஷங்களில் 288 வசனங்கள் பணத்தைக் குறித்துப் போதிக்கின்றன. அநீதியான உலகப் பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? என்று இயேசு கூறினார் (லூக்கா 16 :11) . பணத்தில் உண்மையாயிராவிட்டால் தேவன் நமக்கு ஆவிக்குரிய கிருபைகள், வரங்கள், வல்லமைகள், வேத ஞானம், ஜெபத்திற்கு பதில்கள் ஆகியவற்றை தருவது எப்படி ?

#### பணத்தை சம்பாதிப்பதில் உண்மை:

பணத்தை சம்பாதிப்பதில் தேவனுடைய பிள்ளைகள் உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்க வேண்டும். கடினமாக உழைத்து சம்பாதிக்க வேண்டும்

என்று வேதம் சொல்லுகிறது. வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம், கைப்பாடாய் சேர்க்கிறவனோ விருத்தியடைவான் (நீதி.13:11). கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது (நீதிமொழிகள் 11:1;20:10,23). சுமுத்திரையான நிறைக்கல்லோ அவருக்குப் பிரியம் (ஓசியா 12:7; மீகா 6:11; உபாகமம் 25 : 15). நேர்மையற்ற குறுக்கு வழியில் பணம் ஈட்ட முயற்சிப்பது, அநியாய வட்டி வாங்குவது, லஞ்சம் வாங்குவது, திருட்டு போன்ற காரியங்களில் தேவபிள்ளைகள் ஈடுபடக் கூடாது (நீதி.28:8; சங்கீதம்15:5; நீதி.15:27;16:8). மேலும் உங்கள் வேலை ஸ்தலத்தில் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு வேலை செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே மனப்பூர்வமாகவும், உண்மையாகவும் பணி செய்யுங்கள் (எபேசியர் 6 : 6; கொலோசெயர் 3 : 22).

### பணத்தை செலவழிப்பதில் உண்மை :

பணக்காரியங்களில் நாம் திறந்த புத்தகமாக இருக்க வேண்டும். பணத்தை செலவழிப்பதில் உண்மை தேவை. தேவன் தந்த வருமானத்திற்குள் செலவு செய்ய பிரயாசப்படவேண்டும். வீண் செலவுகள், கடன் வாங்குதல் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும் (நீதிமொழிகள் 22:7, ரோமர் 13:8). வரி செலுத்த வேண்டியவர்களுக்கு வரி செலுத்த வேண்டும் (ரோமர் 13:7). குடும்பத்தை நன்றாக விசாரித்து கவனிக்க வேண்டும் (1 தீமோ.5:4,8). மற்றவர்களுடைய குறைச்சலில் முடிந்தவரை கொடுத்து உதவ வேண்டும் (எபே.4:28). நம்முடைய பணம் தேவனுடையது என்ற எண்ணம் எப்பொழுதும் இருக்க வேண்டும். தசமபாகங்களையும், காணிக்கைகளையும் ஊழியத்திற்கு உற்சாகமாக கொடுக்க வேண்டும் (மல்கியா 3:10; லூக்கா 6:38). கடைசி நாட்களில் வாழும் நாம் கர்த்தருடைய ஊழியத்திற்காக உற்சாகமாக, தியாகமாகக் கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (2கொரி. 9:7; 8:2,3; லூக்கா 21:4). நாம் கர்த்தருக்குக் கொடுக்கும்போது பரலோகத்தில் பொக்கிஷத்தைச் சேர்த்து வைக்கிறோம் (மத்தேயு 6:20). கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெறுகிறோம் (லூக்கா 6:38; 2கொரி. 8:9).

### 4. உங்கள் சரீரமாகிய ஆலயம் (TEMPLE)

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? (1கொரி.6:19) என்று வேதம் கூறுகிறது. நம்முடைய சரீரம் தேவனுக்கு சொந்தமானது. தேவன் தங்கும் ஆலயமாயிருக்கிறது. இந்த சரீரத்தை இன்று அநேகர் சரியாக பராமரிப்பது இல்லை. சரீரம் தற்காலிகமானது என்றாலும் இது நாம் வாழ்வதற்கு தேவன் தந்த ஆசீர்வாதமாகும். தேவன் தந்த சரீரத்தை உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக நாம் பராமரிக்கும்போது நம்முடைய வாழ்க்கை பல ஆண்டுகளுக்கு அநேகருக்கு ஆசீர்வாதமாக அமையும். உங்கள் சரீரத்தினாலே தேவனை மகிமைப்படுத்துங்கள் என்று வேதம் கூறுகிறது (1 கொரி. 6 : 20).

சரீரம் ஆரோக்கியமாயிருப்பதற்கு தினமும் நல்ல உணவு, 2-3 லிட்டர் தண்ணீர், சுத்தமான காற்று, உடற்பயிற்சி, சூரிய ஒளி, போதிய ஓய்வு, இச்சையடக்கம் ஆகியவை மிகவும் அவசியம். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது

(1 கொரி.6:13). ஆகவே தவறான உறவுகள், புகைப்பிடித்தல், போதை வஸ்து, மதுபானம் போன்றவற்றால் சரீரத்தை கெடுத்துப் போடாமல் கர்த்தருக்குரிய சரீரத்தை கர்த்தருக்கே அர்ப்பணிக்க வேண்டும். நம்முடைய சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் (ரோமர் 12:1). உங்கள் சரீரங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடாமல், பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள் (ரோமர் 6:19; 2 கொரி.7:1). துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுவைத் தரித்துக் கொள்ளுங்கள் (ரோமர் 13:14). எல்லாவற்றிலும் இச்சையடக்கமாயிருந்து, சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துங்கள் (1கொரி 9: 24-27). அப்பொழுது அழிவில்லாத கிரீடத்தை பெறுவீர்கள்!

**5) சத்திய சுவிசேஷம் (TRUTH)**

'சுவிசேஷத்தை பிரசிங்கப்பது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ, உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே', என்று பவுல் கூறுகிறார் (1கொரி 9 : 16, 17).

சுவிசேஷ செய்தி தேவன் நம்மேல் ஒப்புவித்த விலையேறப் பெற்ற முத்து. சுவிசேஷ செய்தியில் இரட்சிப்பும் நித்திய ஜீவனும் உண்டு. இதை நாம் புதைத்து போடாமல், மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். சுவிசேஷத்தை அறிவிப்பது தேவன் நமக்கு கொடுத்த பிரதான கட்டளை (மத்தேயு 28: 19,20). சுவிசேஷத்தை அறிவிக்க எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும் (1 பேதுரு 3:15; 2 தீமோ.4:2). நம்முடைய பொருளாதாரத்தில் ஒரு பகுதியையும், நம்முடைய நேரத்தில் ஒரு பகுதியையும் சுவிசேஷ ஊழியத்திற்காக பயன்படுத்தும்போது தேவனுக்கு நல்ல உக்கிராணக்காரர்களாக மாற முடியும்!

தேவன் நம்மிடத்தில் ஒப்புவித்த சுவிசேஷத்தைக் குறித்து நம்மிடம் கணக்கு கேட்பார். இந்த சுவிசேஷத்தை எத்தனை பேரிடம் பகிர்ந்து கொண்டிருக்கிறோம்? எத்தனை பேரை தேவனுக்காக ஆதாயப்படுத்தியிருக்கிறோம்? (ரோமர் 1:15,16). இயேசுவின் வருகையின்போது அவர் முன் வெட்கத்தோடு நிற்கப் போகிறோமோ அல்லது தலை நிமிர்ந்து மகிழ்ச்சியோடு நிற்க போகிறோமோ? (1தெச.2:19; தானி. 12:3).

பிரியமானவர்களே, தேவன் நம்முடைய கையில் கொடுத்தவைகளுக்கு நல்ல, உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக இருப்போம். அப்பொழுது அவர், 'நல்லது உத்தமும் உண்மையுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி' என்று கூறுவார் (மத்தேயு 25:21). மேலும் தேவன் நமக்காக வைத்திருக்கிற ஜீவ கிரீடம், நீதியின் கிரீடம், மகிழ்ச்சியின் கிரீடம், அழிவில்லா கிரீடம், வாடாத கிரீடம் ஆகியவற்றை பெற்று அவரோடு என்றென்றும் மகிழ்ச்சியோடு ஆளுகை செய்வோம்!.

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி



# நீங்களும் பைபிளை வாசிக்கலாம்

## You too can read the Bible

**Rev. Dr. L. ஜெயபாலன்**

மண்டல தலைமைப் போதகர், திண்டுக்கல் மண்டலம்

இன்று நீங்கள் பைபிளை வாசித்தீர்களா?

ஒரு செல்வந்தர் கிறிஸ்துமஸ் காலம் வந்தபோது தனது கையில் பைபிளை ஒன்றை வைத்துக்கொண்டு, தனது வீட்டில் வேலை செய்தவர்களை சந்தித்தார். தோட்டக்காரர் அவரை கண்டவுடன் "வணக்கம் ஐயா" என தனது கைகளைக் குவித்து வந்தனம் செலுத்தினான். உடனே செல்வந்தர் கிறிஸ்துமஸ் பரிசாக பைபிள் வேண்டுமா அல்லது 2000 ரூபாய் பணம் வேண்டுமா? என்று தோட்டக்காரனிடம் கேட்டார்.

உடனே அந்த தோட்டக்காரர், ஐயா, தயவுகூர்ந்து எனக்கு "பைபிள்" வேண்டாம். அந்த 2000 ரூபாய் எனக்கு கிடைத்தால் கிறிஸ்துமஸ் தினத்தை ஜாம் ஜாம் என கொண்டாடுவேன் என்றான். தோட்டக்காரர் முதலாளியிடமிருந்து 2000 ரூபாயை பெற்றுக்கொண்டு, "மனைவிக்கு சேலை, பிள்ளைகளுக்கு புது ஆடைகள், எனக்கு வேஷ்டி சட்டை மற்றும் பலகாரம் செய்வதற்குரிய பொருள்களை வாங்கவேண்டும்" என்று மனதில் திட்டமிட தொடங்கினான்.

அந்த செல்வந்தர் நேராக சமையலறைக்குச் சென்றார். சமையல்காரியை பார்த்து, தோட்டக்காரனிடம் கேட்டவாரே கேட்டார். அதற்கு அவள், "ஐயா பைபிளுக்குப் பதிலாக'' அந்த 2000 ரூபாயை கொடுப்பீர்கள் என்றால் கோடிப்புண்ணியமாகயிருக்கும். இந்த வருடம் கிறிஸ்துமஸ் செலவுகளுக்கு அதுபோதும் என்று சொல்லி அவரிடமிருந்து 2000 ரூபாயை பெற்றுக் கொண்டாள்.

ஜான் என்ற சிறு பையன் அங்கே எடுபிடி வேலை செய்து வந்தான். அவனைப் பார்த்து, ஜான், உனக்கு கிறிஸ்துமஸ்க்கு அன்பளிப்பாக பைபிள் வேண்டுமா? அல்லது பணம் வேண்டுமா? என முதலாளி கேட்டதற்கு, "ஐயா எனக்கு பைபிள்" தாருங்கள் அது எனக்குப் போதும் என்று சொல்லி பைபிளை பெற்றுக்கொண்டான்.

அங்கிருந்த மற்றவர்கள் அவனைப் பார்த்து, "பிழைக்கத்தெரியாத பையன்" என்று பேசிக்கொண்டனர். சாப்பாட்டு வேளை வந்தது, அந்நேரத்தில் சிறுவன் பைபிளை திறந்து பார்த்தான். என்ன ஆச்சரியம்! பைபிளுக்குள் ரூபாய் நோட்டுகள் இருந்தன. அவனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

மற்றவர்களோ, வயிற்றில் அடித்துக்கொண்டு "அது பைபிள்" தானே என்று நினைத்து மோசம் போனோமே என்று வேதனைப்பட்டனர். ஆம் இந்த வேதப்புத்தகம், அது ஒரு சிறந்த பொக்கிஷம். நாம் அதை வாசிக்க வேண்டும், நாம் அதை நேசிக்க வேண்டும். யோசிக்க வேண்டும்.

கடந்த இதழில் 119-ம் சங்கீதத்திலிருந்து இரண்டு அம்சங்கள் வெளிவந்தன. கடவுளுடைய வார்த்தையின் அட்டவணை (The Briefing of God's Word), கடவுளுடைய வார்த்தையின் ஆசீர்வாதங்கள் (The Blessings of God's Word). இந்த இதழில் கடவுளுடைய வார்த்தையின் அழகு (The Beauty of God's Word) இடம் பெறுகிறது.

**● கடவுளுடைய வார்த்தையின் அழகு (The Beauty of God's Word)**

**தேவனுடைய வார்த்தையின் அழகை அல்லது அதிசயங்களை பார்க்க கீழ்கண்ட காரியங்கள் தேவை**

**● ஆவிக்குரிய கண்கள் திறக்கும்படி ஜெபியுங்கள்**

"உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும்" (சங்.119:18). கடலின் ஆழத்தில் சென்றால்தான் முத்துக்கள் கிடைக்கும். மண்ணை ஆழமாக தோண்டினால்தான் தங்கம் கிடைக்கும். இஸ்மவேல் தண்ணீர் இல்லாமல் அழுதபோதுதான், கர்த்தர் ஆகாரின் கண்களைத் திறந்தார். பிலேயாமின் கண்கள் திறந்தபோதுதான் அவன் தேவதூதனை கண்டான். சீடர்களின் கண்கள் திறந்தபோதுதான், தங்களுடன் வந்தவர் இயேசு என்பதை கண்டு கொண்டனர்.

எனவே வேதாகமத்திலுள்ள அதிசயங்களை அறிந்துகொள்ள நமது ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட வேண்டும்.

**● ஆவிக்குரிய பொக்கிஷங்கள் நிறைந்தது இந்த வேதாகமம்**

"அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின் வேதமே எனக்கு நலம்" (சங்கீதம் 119:72). இந்த வேதாகமம் ஒரு ஒப்பற்ற நூல் மிகவும் விலையேறப்பெற்றது. இதை எத்தனை தடவை படித்தாலும் திகட்டாது. ஒரு போதகரின் மாமியார் அவர் கர்த்தரை நேசிக்கும் ஒரு மூதாட்டி. நான் அவர்களோடு பேசுகையில், வேதாகமத்தை 15 நாட்களுக்குள் ஒரு தடவை படித்து முடித்துவிடுவேன் என்றார். நான் இந்த வேதத்தை தினமும் ஏழு அதிகாரங்கள் என வருடத்தில் இரண்டு தடவை படித்து முடித்து விடுவேன். அதை ஒவ்வொரு தடவை படிக்கும்போதும், ஆண்டவர் எனக்கு புதிய காரியங்களை கற்பித்துக் கொண்டே இருக்கிறார்.

ஒரிஜன் என்பவர் சபை பிதா. அவர் தேவன் மேல் மிகவும் பற்று கொண்டவர். மரணத்திற்கு அஞ்சாதவர். அவர் வேதாகமத்தைக் குறித்து கீழ்கண்டவாறு கூறினார். "பாவியான மனிதன் வேதாகமத்தை வாசிக்கும்பொழுது பாவ உணர்வடைந்து பாவ மன்னிப்பை பெறுகின்றான். பாவ மன்னிப்பை பெற்றவன் வேதாகமத்தை வாசிக்கும்போது பக்தனாக மாறுகின்றான். பக்தன் வேதாகமத்தை வாசிக்கும்போது பரிசுத்தவானாக மாறுகிறான் என்கிறார்.

**● அதிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களை தியானம் பண்ணவேண்டும்**

பைபிள் படிக்கும்பொழுது மனதை சிதறடிக்க விடக்கூடாது. நாம் படித்துக்கொண்டிருக்கையில், வரிசையாக வசனத்தை வாசிப்பது நமக்கு புலப்படும். ஆனால் நமது மனதோ வேறு காரியங்களில் இருக்கும். எனவே மனதை ஒருமனப்படுத்தத் தெரியவேண்டும்.

ஒரு Botanist தாவிர இயல் நிபுணர் தோட்டத்தில் பலவிதமான மரங்கள், செடிகள், கொடிகள், இலைகள், பழங்கள், விதைகள் ஆகியவற்றை ஆராய்ச்சி செய்து ஒரு கட்டுரை அல்லது ஒரு நூலை எழுதிவிடுவார்.

ஒரு வண்ணத்துப்பூச்சி (Butterfly) பல பூக்கள் மேல் அமர்ந்து பறந்து சென்றுவிடும். ஆனால் தேனீ, பூக்கள் (Bee) மேல் அமர்ந்து, அதில் உள்ள சத்தை உண்டு பின்னர் தேன் கூட்டில் தேனைக் கொடுக்கின்றது. அவ்வாறே நமது வாழ்க்கையில் பிறருக்கு பிரயோஜனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

“உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம்” (சங்.119:97).

“உமது வசனத்தை தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும்” (சங்.119:148).

இங்கிலாந்திற்கு மேற்கே உள்ள வேல்ஸ் என்ற நாட்டில் ஜேக்கப் ஜோன்ஸ் என்பவர் இருந்தார். அவர் ஒரு நெசவுத் தொழிலாளி. அவருடைய மகள் பெயர் மேரி ஜோன்ஸ். பெற்றோர்கள், புதன்கிழமை மாலை வேளைகளில் வேதத்தை கற்றுக்கொள்ள தேவாலயத்திற்கு செல்லும்போது மேரியும் அவர்களுடன் செல்வதுண்டு. வயோதிபர்கள் மத்தியில் சிறுமி மேரியை கண்ட போதகர் மகிழ்ச்சியுடன் அவளை பாராட்டுவதுண்டு.

மேரிக்கு வேதாகமக் கதைகள் மிகவும் பிடிக்கும். அவள் மிக ஏழ்மையான குடும்பத்தில் பிறந்ததால் மேரிக்கு கல்வி கற்க முடியவில்லை. மேரி ஒரு குடியானவருடைய மனைவியிடம் முட்டைகள் விற்க இவள் செல்வதுண்டு. மேரி எழுதப் படிக்க அந்த அம்மாளிடம் கற்றுக்கொண்டாள்.

மேரி முட்டை விற்க செல்லும் போதெல்லாம் அந்த வீட்டிலிருந்த வேதாகமத்தை வாசிக்க அனுமதி பெற்றாள். அக்காலத்தில் (1800) ஒரு ஆலயத்திற்கு ஒரு வேதம் மட்டும்தான் இருந்தது. அந்த வேதத்திலிருந்து, வேதபாடம் வாசிக்கையில், சபையார் பயபக்தியுடன் எழுந்து நிற்பதுண்டு.

வேதாகமம் ஒன்றை எப்படியாகிலும் தனக்கென்று ஒன்று வாங்க வேண்டும் என ஆர்வம் கொண்டாள் மேரி. முட்டைகள் விற்பதன் மூலம் வந்த பணம், காட்டில் விறகுகளை சேகரித்து அதை விற்பதின் மூலம் வந்த பணம் மற்றும் கிழிந்த ஆடைகளை தைத்தல் ஆகியவைகள் மூலம் வந்த பணத்தை, கொஞ்சம் கொஞ்சமாக சேமிக்க ஆரம்பித்தாள்.

ஒரு நாள் முட்டை விற்கச் சென்றவள், பொழுது மங்கிய பொழுதிலும் வீட்டிற்கு வந்து சேரவில்லை. கலக்கமடைந்த பெற்றோர் தங்களது மண்ணெண்ணை விளக்குடன் தேடிச்செல்ல ஆரம்பித்தனர். வழியில் வந்த மகளை கண்டவுடன் மகிழ்ச்சியுடன் அவளது கால தாமதத்திற்கு காரணத்தை அறிய முயன்றபோது “அங்கு வேதாகமத்தை வாசிப்பதில் நேரத்தை செலவழித்தேன்” என்றாள். அம்மா நான் மத்தேயு 7-ம் அதிகாரத்தை வீட்டிற்கு கொண்டு வந்துவிட்டேன் என்றவுடன், மகளே ஏன் அதை திருடிக் கொண்டு வந்தாய் என கேட்கையில், “அதை மனப்பாடம் செய்து வந்துவிட்டேன்” என்றாள்.

வேதத்தை வாங்க வேண்டும் என்ற ஆர்வத்தால் பணத்தை சேமித்து, 25 மைல்கள் வெறுங்காலில் நடந்து சென்றாள். போதகரை சந்தித்த மேரியிடம் ஆலயங்களிலே வேதாகமம் இல்லாத நிலையில் உனக்கு எப்படி என்றவுடன், அதிர்ச்சி அடைந்தாள் மேரி. இது போதகரின் உள்ளத்தை தொட்டது.

இதை போதகர் லண்டனில் உள்ளவர்களிடம் சொன்னவுடன் 1804-ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ம் நாள். பிரிட்டானிய அகில உலக வேதாகம சங்கம் உருவாயிற்று. மேரி உபயோகித்த வேதாகமம் இங்கிலாந்திலுள்ள ஒரு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. உங்களிடம் எத்தனை வேதாகமங்கள் உள்ளன. அதை வாசித்தீர்களா? தேவ அபிஷேகம், ஆலோசனைகளுக்கு 94434 74921 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.



# பிரசங்கி புஸ்தகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

வாருங்கள், தேவன் இல்லாமல் வாழும் வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதைப் பார்ப்போம், தேவன் இல்லாமல் வாழ்ந்து எதைச் சாதித்துவிட்டாய்? உலகத்துக்காகவே வாழ்ந்து என்னத்தைப் பெற்றுவிட்டாய்? **ஒன்றுமில்லை,** என்பதுதான் பிரசங்கியாகிய சாலமோனின் அனுபவம்.

பழைய ஏற்பாட்டிலுள்ள ஐந்து புத்தகங்கள் செய்யுள் வடிவில் எழுதப்பட்டவை. அவை, யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு ஆகியவை. இவற்றில் நீதிமொழிகள், பிரசங்கி ஆகியவை இரண்டும் **ஞான இலக்கியங்கள்** என்றும் அழைக்கப்படுகின்றன. ஏனெனில் அவைதரும் செய்திகள் அனுதின வாழ்விற்குரிய ஞானத்தையும் அதன் விளக்கத்தையும் தருகின்றன. இக்கட்டுரையில் **பிரசங்கி** புத்தகத்தைப் பற்றிக் காண்போம்.

**'பிரசங்கி'** புத்தகத்தை, ஒரே வாசிப்பில் பன்னிரண்டு அதிகாரங்களையும் சேர்த்து வாசித்தால் அதன் ஒட்டுமொத்தக் கருத்தினை எளிதாக விளங்கிக்கொள்ள இயலும். இது, ஞானியாகிய சாலமோன் தனது அனுபவத்திலிருந்து எழுதும் புத்தகமாகும். சாலமோன், தனது இளவயதில் **'உன்னதப்பாட்டு'** புத்தகத்தையும், தனது நடுத்தரவயதில் **'நீதிமொழிகளையும்**, தனது முதிர்வயதில் **'பிரசங்கி'**யையும் எழுதினான் எனலாம்.

## பிரசங்கி புத்தகத்தின் செய்தி

தேவனுக்குப் பயப்படு (12:13), ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும்... தேவன் நியாயத்திலே கொண்டு வருவார் (12:14), ஆகிய இரண்டும்தான் இப்புத்தகத்தின் செய்தியாகும்.

"**மாயை**" என்ற வார்த்தை: "**மாயை**" என்னும் வார்த்தை இப்புத்தகத்தில் 38 முறை வருகிறது. "**மாயை**" என்பதற்கு "**அர்த்தமற்றது**" என்பது பொருள். அர்த்தமற்ற வாழ்க்கை எது? அது, தேவனைத் தவிர்த்து மனிதன் வாழும் உலக வாழ்க்கையே ஆகும். தனது சிருஷ்டிகரான தேவனை அவன் எப்பொழுது கண்டடைகிறானோ, அப்பொழுதுதான் அவனது வாழ்க்கை மாயையிலிருந்து விலகி, அர்த்தமுள்ளதாக மாறிவிடுகிறது என்பதே சாலமோனுடைய கண்டுபிடிப்பு எனலாம் (3:14,17; 5:7; 7:18; 8:12-13; 11:19).

மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான். சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன? என்ற பிரசங்கி 1:2-3 வசனங்களை, நமதாண்டவர் மாற்கு 8:36-ல் சொல்லும் வசனத்துடன் ஒப்பிட்டுப் படிக்கவேண்டும். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என்கிற இந்த வசனம், பிரசங்கியின் கேள்விக்குப்பதில் தருகிறது.

## பிரசங்கி புத்தகத்தின் முக்கிய கருத்துக்கள்

தேவனுக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கும் வாழ்வே சரியானது என்பதை பிரசங்கி, நான்கு பகுதிகளாக இப்புத்தகத்தில் தருகிறான்.

**1. தேவனில்லாத வாழ்க்கை மாயையான வாழ்க்கை (1:1-2:26)**

தேவனுடைய படைப்புகளாகிய சூரியன், காற்று, தண்ணீர் ஆகிய அனைத்துமே நிலையானவை. ஆனால், மனிதனுடைய வாழ்க்கை நிலையற்றது. இவ்வாழ்க்கையில், மனிதன் தேவன் இல்லாமலும், தேவனைத் தவிர்த்தும் செய்பவை அனைத்துமே பயனற்றவையும், புத்தியீனமானவைகளுமாகும்.

**2. தேவனுடைய திட்டத்தை அறிய மனிதன் முயலும்போது மனிதன் விரக்தியடைகிறான் (3:1-5:20)**

தேவனுடைய திட்டங்கள் என்னவென கண்டுகொள்ளவேண்டுமென மனிதன் எடுக்கும் அனைத்து முயற்சிகளுமே அவனுக்கு விரக்தியைக் கொண்டுவரும். தன்னைக் குறித்த தேவத்திட்டத்தை மனிதன் அறியவேண்டுமெனில் தன்னை சிருஷ்டித்த அந்த தேவனை தனிப்பட்ட உறவினடிப்படையில் அறிந்து கொள்ள வேண்டும். துன்மார்க்கப் பார்வையில் அவன் தன்னைக் குறித்தும், தனது வாழ்வின் தேவனுடைய விரிவான திட்டத்தையும் அறிய இயலாது.

தேவனுடைய பிள்ளையாக அவன் மாறி, அவரை ஆராதிக்கும்போது தேவன் அவனுக்கென ஏற்படுத்திய வாழ்க்கையை மனிதன் சந்தோஷமாய் அனுபவிக்க முடியும் (5:1-16).

**3. தேவ திட்டத்தைப் பற்றிய சரியான பார்வை (6:1-8:15)**

அதிக செல்வம் தேவனுடைய அனுக்கிரகம் என்றோ, அல்லது அதிக வறுமையிலிருக்கும் ஒருவனை தேவன் வெறுக்கிறார் என்றோ எடுத்துக்கொள்ளல் ஆகாது. தனது கஷ்டங்களுக்காக அவன் தேவனைக் குறைகூறாமல், அவருக்குப் பயந்து வாழும்போது தேவன் அவனுக்கு ஞானத்தைக்கொடுத்து பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கிறார் (7:16-18; 8:1-14).

**4. பிரசங்கி தரும் நடைமுறை ஆலோசனைகள் (8:16-12:14)**

தேவனுடைய ரகசியங்களை மனிதன் அறிய இயலாது. அதனால் மனிதன் நம்பிக்கை இழக்கக்கூடாது; தேவனுடைய ஞானத்தால் அவன் தான்செய்யும் அனைத்திலும் வெற்றிபெற முடியும். ஒருவன் முதிர்வயதில் சரீரபெலன், ஆத்துமபெலன், தேவனை சேவிக்கும்பெலன் அனைத்தையும் இழந்து விடுகிறான். எனவே, தனது வாலிப நாட்களிலேயே தேவனைத்தேடி, அவருக்கு பயந்து வாழ்ந்து, அவரைச் சேவிக்கவேண்டும்; அப்பொழுது தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பலாம்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதின் மகனாகப் பிறந்து, ராஜாவாய் சிம்மாசனத்தில் அமர்ந்து, தேவனிடத்தில் ஞானத்தைப் பெற்று, தேவாலயத்தையும் கட்டி, கர்த்தருக்குப் பயந்து வாழ்ந்தவன்தான் சாலமோன். ஆனால் சற்றே சறுக்க, வாழ்க்கைப்பாதை முழுவதிலும் சறுக்கி, சீரழிந்து, கெட்டுப்போனான். அவன் உண்மையாகவே மனந்திரும்பி, தேவனுடைய பாதையில் திரும்பவும் வாழ்ந்தான் என்பதற்கு இப்புத்தகம் தெளிவான விளக்கம் தருகிறது. நான்போன பாதையில் நீ போகாதே, நான் திரும்பிவந்துவிட்டப் பாதையில் உன் நடைகள் உறுதிப்படட்டும் என்ற சாலமோனின் போதனைகள் அனைவரையும் தேவனண்டைத் திருப்பும் என்பது நிச்சயம்.

**பிரசங்கி புத்தகத்தில் அனைவரையும் கவர்ந்த வேதபகுதிகள் இரண்டு**

பிரசங்கி 3:1-11;12:1-7 இவற்றின் விளக்கத்தைச் சுருக்கமாகக் காண்போம்:

**3:1-11 வசனங்களின் விளக்கம்**

இவ்வுலகில், ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமும், ஒவ்வொரு

காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமும் உண்டு. நமது வாழ்க்கையில் இவை அனைத்தையும் ஆண்டு நடத்தும் தேவனுடைய ஆளுகையும், ஆதாரமும் உண்டு. பிறப்பு முதல் இறப்பு வரை நமது வாழ்க்கையில் தமது திட்டத்தை தேவன் செயல்படுத்தி வருகிறார். பெரும்பாலான சமயங்களில் நாம் இதை அறியாதிருந்தாலும், தேவன் தமது கிரியைகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்.

நமது தனிப்பட்ட வாழ்க்கையில் தேவன் தமது சித்தத்தை நிறைவேற்றவே செயல்படுகிறார். உற்றுக் கவனித்துப் பார்த்தால், நமக்கு நடப்பவையெல்லாம் தேவனுடைய அனுமதியின் பேரிலேயே நடக்கிறது. அதனதன் காலத்தில் அவை அனைத்தும் நன்மைக்காகவே நடக்கின்றன. இந்த உண்மையை நாம் அங்கீகரித்தால், நமக்கு நேரிடும் மிகக்கடினமான அனுபவங்களும் நேர்த்தியானவைகளாகவே காணப்படும். இந்த உண்மையை பதினான்கு குறிப்புகளில் பிரசங்கி புத்தகம் உறுதிப்படுத்துகிறது (3:1-11); அவற்றை இங்கு சுருக்கமாய்ப் பார்ப்போம்.

● பிறப்பும் இறப்பும், 3:1. **பிறக்க ஒருகாலமுண்டு, இறக்க ஒருகாலமுண்டு**

பிறப்பு, இறப்பு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் இன்றைய சமுதாயத்தில் காணப்படும் கருச்சிதைவு, குடும்பக் கட்டுப்பாடு, கருணைக்கொலை, கொலை, தற்கொலை ஆகிய அனைத்தும் தேவ தீர்மானத்துக்கு எதிரானவை என்பதையே சாலமோன் இங்கு குறிப்பிடுகிறார். உங்கள் வாழ்க்கையில் இன்று தேவ தீர்மானத்துக்கு மாறாக, பிறப்பைத் தடுத்தலோ அல்லது இறப்பை ஏற்படுத்தலோ உங்கள் அனுமதியுடன் நடக்கிறதா? அவ்வாறாயின் தேவத்திட்டத்துக்கு உங்களை அர்ப்பணியுங்கள்.

● நடுதல், பிடுங்குதல், 3:2. **நட ஒருகாலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒருகாலமுண்டு**

விதைப்பு, நடவு, களைபிடுங்குதல், அறுவடை ஆகிய அனைத்து காலங்களுமே இயற்கையில் தேவன்தரும் ஆசீர்வாத காலங்கள் ஆகும். தேவன்தரும் காலச் சூழலுக்கேற்ப பயிர் செய்யும் விவசாயி பலனடைவான். அறுவடைகாலத்தில் நடாதே, நடுகிற காலத்தில் அறுவடை செய்யும் சோம்பேறியாயிராதே என்பதே இங்கு சொல்லப்பட்டுள்ளது. உங்கள் வாழ்க்கையில் இது விதைப்புக்கும், அறுவடைக்கும் இடைப்பட்ட 'களை' பிடுங்கும் காலமா? நீங்கள் செழித்துவளர கர்த்தர் உங்கள்மேல் கரிசனையுடனிருக்கிறார் என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்.

● கொல்லுதல், குணமாக்குதல், 3:3. **கொல்ல ஒரு காலமுண்டு, குணமாக்க ஒரு காலமுண்டு**

வியாதி, கொள்ளைநோய் காலங்களில் வரும்; மரணங்கள், தேவனுடைய ஆளுகைக்குட்பட்ட செயல்களே (1சாமு.2:6).

இன்று மரணங்களையும், கொள்ளை நோய்களையும் கண்டு பயந்திருக்கிறீர்களா? தேவன் ஆதிமுதல் அந்தம் மட்டும் செய்துவரும் கிரியைகளைக் கண்டுபிடிக்க நமக்கு இயலாது. அவரது சர்வ ஆளுகை நம்மை பாதுகாக்கும் என்பது மட்டும் நிச்சயம். அப்படியே, இடிக்க ஒரு காலமுண்டு, கட்ட ஒரு காலமுண்டு; அவை தேவச்செயல்கள். அழுகையும், புலம்பலும் தேவனுடைய செயலால் மாறும். நகைப்பும் நடனமும் நம்மைக் களிப்பாக்கும் என்பது பிரசங்கியின் அனுபவ அறிவு.

● கற்களை எறிந்துவிடுதல், கற்களை சேர்த்தல், 3:5. **கற்களை எறிந்துவிட ஒரு காலமுண்டு, கற்களை சேர்க்க ஒருகாலமுண்டு**

பாலஸ்தீனம் கற்களும், பாறைகளும், மலைகளுமுள்ள தேசம்.

➤ பயிரிடுமுன் விவசாயி கற்களைப் பொறுக்கவேண்டும்.

➤ பகைவனை எதிர்த்து தாக்குவதற்கும் கற்கள் பயன்பட்டன.

➤ தனது பகைவனைக் கோபமூட்ட, அவனது வயல் முழுவதும் கற்களை வீசி நிரப்புவார். ஆனால் முதியோரின் ஆலோசனை என்னவெனில், ஒருவன் உன் வயலைக் கற்களால் நிரப்பினால் அவற்றைத் திரும்ப அவனுடைய வயலில் எறிந்துவிடாதே; மாறாக அவற்றைச் சேர்த்து உனக்கு வீடுகட்டப் பயன்படுத்து என்பதாகும். எதற்காக எறிகிறாய், எதற்காகச் சேர்க்கிறாய் என்பதில் கவனமாயிரு; எல்லாவற்றையும் ஆளுகிறவர் கர்த்தர்.

➤நமது வாழ்க்கையில் சிதறிக்கிடந்து வளர்ச்சிக்கு இடையூறு செய்யும் கற்களைப் பொறுக்கி எறிந்துவிடுவோமாக. அழிமதியாய் பிறருக்கு கேடுசெய்யக் கற்களை வீசாமலிருப்போமாக.

● தழுவுதலும், தழுவாமலிருத்தலும், 3:5. **தழுவ ஒரு காலமுண்டு, தழுவாமலிருக்க ஒரு காலமுண்டு**

ஒருவருக்கொருவர் வணக்கம் சொல்லித்தழுவி வரவேற்றலும், சந்தர்பத்திற்கேற்ப சாதுரியமாக விலகிக் கொள்ளலும் வாழ்க்கையின் அவசியங்களாகும். புருஷன் மனைவி உறவுகளிலும் இவை பொருந்தும். உறவுகளைப் பேணிக்காக்கக் கர்த்தர் நமக்கு உதவிசெய்வாராக!

● தடுதலும், இழந்துவிடுதலும், 3:6. **தேட ஒரு காலமுண்டு, இழக்க ஒரு காலமுண்டு**

பொருட்களைச் சேர்த்தல் குழந்தைப் பருவமுதலே மனித இயல்பு. சிறு துரும்பும் பல்குத்த உதவும் எனக்கூறி வீட்டில் குப்பைசேர விடாதிருங்கள். பழையன கழைதலும், புதியன புகுதலும் வாடிக்கையாகவே இருக்கட்டும். போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்பதை மறந்துவிடாமலிருப் போமாக. காப்பாற்றிப் பேணிப் பாதுகாத்தவற்றை எறிந்துவிடும் காலத்தில் நாமாகவே அதைச் செய்யக் கர்த்தர் ஞானமுள்ள இருதயத்தை நமக்குத் தருவார்.

● கிழித்தலும், தைத்தலும், 3:7. **கிழிக்க ஒரு காலமுண்டு, தைக்க ஒரு காலமுண்டு**

துக்கமிகுதியில் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டாலும் (2சாமு.13:31; எஸ்றா 9:5), எப்போதும் துக்கத்தைப் பேணிக்காக்காமல், தைத்து (பழையதை மறந்து) புதுவாழ்வைத் தொடங்குதல் தேவன் ஏற்படுத்திய வாழ்க்கையாகும். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலன். துக்கத்தின் மிகுதியில் மனஅழுத்தத்தில் மவுனமாய் இருப்போர் தேவனுடைய மட்டற்ற இரக்கத்தின் மிகுதியால் வாய்திறந்து பேசும் காலத்தையும் கர்த்தர் கண்டிப்பாய் தருவார் (யோபு 2:13).

● சிநேகித்தலும், பகைத்தலும், 3:8. **சிநேகிக்க ஒரு காலமுண்டு, பகைக்க ஒரு காலமுண்டு**

தேசத்தின் யுத்தகாலங்களையும், சண்டையில்லாத சமாதான காலங்களையும் மனதிற்கொண்டு சாலமோன் இதை எழுதுகிறான். சிநேகிப்பவர்களை சிநேகிக்கத் தவறவேண்டாம். கூடுமானால் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருப்போம்; தேவன் ஆளுகை செய்கிறார்.

ஞானியாகிய சாலமோனின் மேற்கண்ட அனுபவ அறிவுரைகள் அனைவருக்கும் பயன் தருபவையே ஆகும்.

## 12:1-7 வசனங்களின் விளக்கம்

மனித வாழ்க்கையின் முதிர்வயதையும், அதைத் தொடர்ந்த மரணத்தையும் கற்பனைக் கவிதையில் இப்பகுதியில் நாம் பார்க்கிறோம்.

எழுந்து நிமிர்ந்து நிற்கும் வீடொன்று இடிந்து, விழுந்து, சிதைந்து பூமியின் தூளாக மாறிவிடுவதைப்போல் மனிதனும் அழிகிறான். யோபு 4:19; 2கொரி.5:1-2; 2பேதுரு.1:13, ஆகிய வசனங்களில் நமது சரீரத்தையும் ஒரு வீடு என வேதாகமம் சித்தரிக்கிறது. இந்தப் பின்னணியிலேயே, பிரசங்கி 12ம் அதிகாரம் 1 முதல் 7 வரையுள்ள வசனங்களை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

1.நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்குநாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும்,

2.சூரியனும், வெளிச்சமும், சந்திரனும், நட்சத்திரங்களும்,அந்தகாரப்படாததற்கு முன்னும்,

3.மழைக்குப்பின் மேகங்கள் திரும்பத்திரும்ப வராததற்கு முன்னும், வீட்டுக்காவலாளிகள் தள்ளாடி, பெலசாலிகள் கூனிப்போய், ஏந்திரம் அரைக்கிறவர்கள் கொஞ்சமானதினால் ஓய்ந்து, பலகணிவழியாய்ப்பார்க்கிறவர்கள் இருண்டு போகிறதற்கு முன்னும்,

4.ஏந்திர சத்தம் தாழ்ந்ததினால் தெருவாசலின் கதவுகள் அடைபட்டு, குருவியின் சத்தத்துக்கும் எழுந்திருக்க வேண்டியதாகி, கீதவாத்தியக் கன்னிகைகளெல்லாம் அடங்கிப்போகாததற்கு முன்னும்,

5.மேட்டுக்காக அச்சமுண்டாகி, வழியிலே பயங்கள் தோன்றி, வாதுமைமரம் பூப்பூத்து, வெட்டுக்கிளியும் பாரமாகி, பசித்தீபனமும் அற்றுப்போகாததற்கு முன்னும், மனுஷன் தன் நித்திய வீட்டுக்குப்போகிறதினாலே, துக்கங்கொண்டாடுகிறவர்கள் வீதியிலே திரியாததற்கு முன்னும்,

6.வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு, பொற்கிண்ணி நசுங்கி, ஊற்றின் அருகே சால்உடைந்து, துரவண்டையில் உருளை நொறுங்கி,

7.இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை.

முதுமையில் நமது ஆரோக்கியத்துக்கு வரும் சரிவுகளை மேலேயுள்ள வசனங்களில் காண்கிறோம். அதில்,12:3,4,5,6 வசனங்களைப் பார்ப்போம்.

**12:3 வீட்டுக்காவலாளிகள் தள்ளாடி** என்பது, முதுமையில் மனிதனது கால்களும், கைகளும் தள்ளாடுவதைக் குறிக்கும். **பலசாலிகள் கூனிப்போய்** என்பது, கால்கள், முழங்கால்கள், தோள்பட்டை அனைத்தும் பெலவீனமடைந்து கூனிப்போகுதலைக் குறிக்கிறது. **எந்திரம் அரைக்கிறவர்கள் கொஞ்சமானதினால்** என்பது, பற்கள் விழுந்து, எண்ணிக்கையில் குறைந்த பொக்கைவாய்ப் பருவத்தைச் சொல்லுகிறது. **பலகணிவழியாய்ப் பார்க்கிறவர்கள் இருண்டு போகிறதற்கு முன்னும்** என்பது, நமது கண்பார்வை மங்கலாகிறபடியால், கையை வைத்து கண்களுக்கு நிழல்கொடுத்துக் கூர்ந்து பார்க்கும் இயலாநிலையைக் குறிக்கிறது.

**12:4 தெருவாசலின் கதவுகள் அடைபட்டு...** நமது காதுகளும், வாயுமே தெருவாசல் எனச் சொல்லப்பட்டுள்ளது. காதுகள் கேட்கவில்லை, அல்லது பற்களெல்லாம் விழுந்துவிட்டபடியால் கைகளை வைத்து வாயை மூடவேண்டிய நிலையினை தெருவாசலின் கதவடைக்கப்பட்ட நிலையாகக் காண்கிறோம். **ஏந்திரசத்தம் தாழ்ந்ததினால்** என்பது நமது பற்களெல்லாம் விழுந்துவிட்ட காலத்தில் மென்று சாப்பிட முடியவில்லை என்ற முதுமையைச் சொல்லுகிறது. **குருவிகள் சத்தத்துக்கும் எழுந்திருக்க வேண்டியதாகி** என்பது, முதுமையினிமித்தம் தூக்கம் சரியாய் வருவதில்லை. அதிகாலைவேளை கொஞ்சம் கூடுதல் தூங்கினால்

நன்றாயிருக்குமே எனத் தோன்றும்போது, குருவிகள் சத்தமிட்டு எழுப்பிவிடுகின்றன. கீதவாத்தியக் கன்னிகைகளெல்லாம் அடங்கிப் போகாததற்கு முன்னும் என்பது, நமது குரல் தழுதழுக்க ஆரம்பிக்கிறதையும், சத்தம் பெலவீனமாகிறதையும் குறிக்கிறது.

**12:5 மேட்டுக்காக அச்சமுண்டாகி, வழியிலே பயங்கள் தோன்றி...**என்பது, நாம் முதுமையடையும்போது, படியேறிச் செல்லவோ, மேடுகளில் ஏறவோ முடியவில்லை. கோலூன்றி நடக்கும்போது, வழியில் விழுந்துவிடுவோமோ என்ற பயம் வந்துவிடுகிறது. **வாதுமைமரம் பூப்பூத்து** என்பது, உங்களுக்குத் தலையில் எஞ்சிய முடிகள் ஏதாவது இருந்தாலும், அவையும் வெள்ளை நிறமாக மாறி பூப்பூத்த வாதுமை மரம் போல் உங்கள் தலை காட்சியளிப்பதைக் குறிக்கிறது. (வாதுமை மரம் (almonds) வெள்ளை நிறமாக பூ பூக்கும்). **வெட்டுக்கிளியும் பாரமாகி** என்பது, மனிதனின் முதுமையை, பெலவீனமான வெட்டுக்கிளிகளுடன் ஒப்பிட்டுச் சொல்லப்பட்ட ஒப்புமை ஆகும்: கோடைகாலத்தின் முடிவில் மிகவும் பெலவீனப்பட்டுப் போனதால் வெட்டுக்கிளிகள் கால்களை இழுத்துக் கொண்டே நடக்கும். வயதான காலத்தில் நமது நிலையும் அதுதான்! **பசித்தீவனமும் அற்றுப்போகாததற்கு முன்னும்** என்பது, நமக்கு முதிர்வயதாகும்போது, பசியின்மை பழக்கமாகிவிடுகிறது; (பாலுறவுப்பசியும் முடிவுக்கு வந்துவிடுகிறது) என்பதைக் குறிக்கிறது. **மனுஷன் தன் நித்தியவீட்டுக்குப் போகிறதினாலே, துக்கம் கொண்டாடுகிறவர்கள் வீதியிலே திரியாததற்கு** முன்னும் என்பது, மரணத்தின் மூலம் பிரிக்கப்பட்டு நீங்கள் திரும்பிவராத வீட்டுக்குச் செல்லுவதையும் உங்கள் அடக்க ஆராதனைக்கு உறவுகள், நட்புகள் கூடிவருதலையும் குறிக்கிறது.

**12:6 வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு, பொற்கிண்ணி நசுங்கி, ஊற்றனருகே சால் உடைந்து, துரவண்டையில் உருளை நொறுங்கி** என்பது, இரத்த ஓட்டமும், இதயத்துடிப்பும் நின்றுவிடும் நிலையில் மனிதனின் உயிர் பிரிகிறது என்பது கவிதை இலக்கியத்தில் தரப்பட்டுள்ளது.

பிரசங்கியின் ஆலோசனை என்னவெனில், இவை அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாய் நிகழ ஆரம்பிக்குமுன், உனக்கு முதிர்வயது வருமுன்னே, வாலிப வயதிலேயே உனது சிருஷ்டிகரான தேவனைத் தேடவேண்டும் என்பதே. ஏனெனில், ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார் அவ்வாறாயின், முதிர்வயதாய் இருக்கும்போது எத்தனை அதிகமாய் தேவனைத் தேடவேண்டும் என்பதை எண்ணி, கர்த்தரண்டை வரவேண்டும்.

---


**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும்**
**உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

**" Tamil District Council of SIAG "**

என்ற பெயரில் காசோலை அல்லது DD எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு சென்னையில் உள்ள
நமது பொருளாளர் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

The Treasurer,
Tamil District Council of SIAG, E-17, Anna Nagar, Chennai - 600 102



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

**Rev. P.S. ராஜமணி**

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## 10. சபைநிர்வாகம் ஆவிக்குரியவர்களிடம் கொடுக்கப்பட்டது

தொடர்ச்சி

**அன்று**

சபையின் நிர்வாகத்தைக் கவனிக்க திறமையுள்ளவர்களை மட்டும் சார்ந்திராமல், ஆவிக்குரிய தகுதியுடையவர்களைக் கண்டுபிடித்து அவர்களிடம் நிர்வாகம் பொறுப்பை ஒப்படைத்தனர்.

**பட்டியல்: 1** (அப்போஸ்தலர் 6:1-8, எருசலேம் சபை)

அன்று சபை நிர்வாகத்திற்காக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்:

1) பரிசுத்த ஆவியானவரால் நிறைந்தவர்கள்.
2) ஞானத்தினால் நிறைந்தவர்கள்.
3) நற்சாட்சி பெற்றவர்கள்.
4) விசுவாசத்தினால் நிறைந்தவர்கள்.
5) வல்லமையினால் நிறைந்தவர்கள்.

**பட்டியல்: 2** (1 தீமோத்தேயு 3 1-7)

1) குற்றஞ்சாட்டப்படாதவன்.
2) ஒரே மனைவியையுடையவன்.
3) ஜாக்கிரதையாயிருப்பவன்.
4) தெளிந்த புத்தியுள்ளவன்.
5) யோக்கியன்.
6) அந்நியரை உபசரிக்கிறவன்.
7) போதக சமர்த்தன்.
8) மதுபானம் குடியாதவன்.
9) அடிக்கிறவனாக இருக்கக்கூடாது.
10) இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாக இருக்கக்கூடாது.
11) பொறுமையுள்ளவன்.
12) சண்டை பண்ணாதவன்.
13) பணஆசை இல்லாதவன் .
14) தன் சொந்த குடும்பத்தை நன்றாக நடத்துகிறவன்.
15) அனுபவமில்லாதவனாக (நூதன) இருக்கக்கூடாது.
16) புறம்பானவர்களால் (ஊர் மக்களால்) நற்சாட்சி பெற்றவன்.

ஆதி சபையின் நிர்வாகம் இப்படிப்பட்டவர்களிடமே கொடுக்கப்பட்டது. எனவே சபை பரிசுத்தமுள்ளதாயும், வல்லமை குன்றாததாயும் வளர்ந்து பெருகின.

## இன்று

இன்று சபையின் நிர்வாகம் எப்படிப்பட்டவர்களிடம் கொடுக்கப்படுகிறது?

## ஸ்தல சபை நிர்வாகம்

ஒரு ஸ்தல சபையின் நிர்வாகக் குழு எவ்விதம் தேர்ந்தெடுக்கப்படுகிறது? சபையிலே பணபலமும், ஆட்கள் பலமுமுள்ளவர்களே நிர்வாகக் குழுவாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதற்காக பணம் செலவு செய்யப்படுகிறது. செல்வாக்கை பயன்படுத்தி ஆள்பிடிக்கும் வேலை நடக்கிறது. இதனால் ஒழுங்கீனமானவர்கள், நடத்தையில் சரியில்லாதவர்கள், ஊழல் பேர்வழிகள் நிர்வாகத்திற்குள் நுழைந்துவிடுகின்றனர். இவர்கள் அரசியல்வாதிகள் போல செயல்படுவதால் திருச்சபைக்குள் அரசியல் நுழைந்து விடுகிறது.

## ஸ்தாபனத் தலைவர்கள்

ஓர் ஸ்தாபனத்தின் நிர்வாகத்திற்கு எப்படிப்பட்டவர்கள் தலைவர்களாக தெரிந்துகொள்ளப்படுகிறார்கள்? அவர்கள் பணம் கொடுத்து ஓட்டுச் சேகரிக்க வெட்கப்படவில்லை. ஜாதி அடிப்படையிலும், சொந்தக்காரர் என்ற நிலையிலும் ஓட்டளிப்பு நடக்கிறது. உலக அரசியல் வட்டாரத்தில் நடைபெறும் அத்தனை அநீதிகளும் சபை நிர்வாகத்திற்குள் வந்துவிட்டது.

இப்படிப்பட்ட தலைவர்களும், ஸ்தலசபை நிர்வாகிகளும் இருந்தால் எப்படி எழுப்புதல் உண்டாகும்? என்றைக்கு நமது தேசம் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்?

சபையின் நிர்வாகம் தெய்வீக நடத்துதலின்படி நடைபெறாமல் ஜனநாயக ரீதியில் நடத்தப்படுவதால் சகல மாம்சீகமான காரியங்களும் சபைக்குள் நுழைந்துவிட்டது. சபை நிர்வாகிகளும், ஸ்தாபனத் தலைவர்களும் மக்களுக்கு பிரியமாய் நடந்து கொள்வதில் கவனம் செலுத்துகின்றனர். நீதி, நேர்மை எது என்று பார்ப்பதில்லை. நமக்கு ஓட்டுப் போட்டவர்களுக்கு எது பிரியமோ அதன்படி செய்வோம் என்று நடந்து கொள்ளுகின்றனர். இதனால் இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய சபை சீர் கேடடைந்து வருகிறது.

இந்த அரசியல் சாக்கடையில் சிக்கிக்கொள்ள விரும்பாத ஆவிக்குரியவர்கள் நிர்வாகத்திலிருந்து ஒதுங்கிவிடுகின்றனர். அரசியல்வாதிகள் கையில் சபை மாட்டிக்கொள்கிறது. இயேசு எப்படிப்பட்டவர் என்பதை உலகத்திற்கு வெளிப்படுத்த வேண்டிய சபை, இன்று உலகத்திற்கும் எங்களுக்கும் அதிக வேறுபாடு இல்லை என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலைமாறி ஆவிக்குரியவர்கள் சபையின் நிர்வாகத்தை நடத்தும்படி ஆவிக்குரியவர்கள் தெரிந்தெடுக்க கர்த்தர் உதவி செய்வாராக.

- தொடரும்

---

## Royal Commissions of Jesus

Here are eight Royal commands of the Lord to His servants.
Are there none of them for you?

1. Go and teach all nations - Matt. 28:19.
2. Go and preach the Gospel - Mark 16:15.
3. Go to the lost sheep - Matt. 10:6.
4. Go into the vineyard - Matt. 20:4.
5. Go into the highways - Matt. 22:9.
6. Go into the streets and lanes - Luke 14:21.
7. Go home to thy family - Mark 5:19.
8. Go and do likewise - Luke 10:37.

# கடவுள் மனிதனாக பிறந்தது ஏன்?

உலக சரித்திரத்தைக் கிறிஸ்துவுக்கு முன் என்றும் (கி.மு) கிறிஸ்துவுக்குப் பின் என்றும் (கி.பி) பிரித்த சரித்திர நாயகர் இயேசு கிறிஸ்து. இயேசுவின் பிறப்பை ஒவ்வொரு ஆண்டும் உலகெங்கும் பல கோடி மக்கள் கொண்டாடுகின்றனர். 2020 ஆண்டுகளுக்கு முன் இவ்வுலகில் கடவுள் மனிதனக 'இயேசு' என்ற பெயருடன் பிறந்த நோக்கம் என்ன? என்பதைச் சற்று தியானிப்பது நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். மூன்று முக்கிய நோக்கங்களை காண்போம்.

**1. கடவுளை வெளிப்படுத்த (To REVEAL God)**

தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனாகிய இயேசுவே அவரை வெளிப்படுத்தினார் என்று வேதம் கூறுகிறது (யோவான் 1:18). கடவுளின் அன்பை, மனதுருக்கத்தை, இரக்கத்தை, வல்லமையை வெளிப்படுத்தும்படியாக இயேசு பிறந்தார். என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று இயேசு சொன்னார் (யோவான் 12:45; 14:8-9). கடவுள் மனிதனாக இவ்வுலகத்தில் 'இயேசு' என்ற பெயரில் பிறந்தார். அவர் மனிதனோடு தன்னை ஈடுபடுத்திக்கொண்டு மனிதனுடைய துக்கங்களில் பங்குபெற்று மனிதனை அவனுடைய எல்லா பிரச்சனைகளிலிருந்தும் விடுவிக்கிறவராகத் தம்மை வெளிப்படுத்தினார்.

**2. மனிதனை விடுவிக்க (To REDEEM Man)**

இயேசு இவ்வுலகில் இரட்சகராக, விடுவிக்கிறவராகப் பிறந்தார். இயேசு என்ற பெயருக்கு அர்த்தம் இரட்சகர் என்பது (மத்தேயு 1:21). இயேசு நம்மை கீழ்கண்ட காரியங்களிலிருந்து விடுவிக்க பிறந்தார்.

**பாவம் :** பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1தீமோ.1:15) பாவம் இல்லாமல் பிறந்த இயேசு நம்மை சகலவித பாவத்திலிருந்து விடுவிக்கிறார் (மத்தேயு 1:21). நம்முடைய பாவங்களை சுமந்து தீர்க்கவே இயேசு மனிதனாக வெளிப்பட்டார் என்று வேதம் கூறுகிறது (1 யோவான் 3:5; எபிரெயர் 9:26). இயேசு சிலுவையில் சிந்தின இரத்தம் நம்முடைய ஜென்ம பாவங்கள், கரும பாவங்கள் அனைத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது (1 யோவான் 1:7). உலகத்தில் பிறக்கிற அனைவரும் பாவத்தில் தான் பிறக்கிறோம் (சங்.53:5). பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23). ஆனால் இயேசு நமக்குப் பாவத்திலிருந்து விடுதலையும் நித்திய வாழ்வையும் அளிக்கிறார்.

**சாபம் :** பலவிதமான சாபங்களின் நிமித்தம் தோல்விகளையும், இழப்புகளையும், ஏமாற்றங்களையும் அடைந்துவரும் மக்களின் சாபங்களை நீக்கி விடுவிக்க இயேசு உலகத்தில் வந்தார். இயேசு மனுகுலத்தின் அனைத்து சாபங்களையும் தன்மேல் சிலுவையில் ஏற்றுக் கொண்டபடியால் மனிதர்களின் சாபங்களை நீக்கி அவர்களை ஆசீர்வதிக்கிறார் (கலா. 3:13).

**வியாதி :** இயேசு நம்மை வியாதிகளிலிருந்து விடுவித்து நமக்குச் சுகவாழ்வு தரும்படியாக இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தார் (மத்தேயு 8:17). அவருடைய தழும்புகளால் சுகமாகிறோம் (ஏசாயா 53:5) என்று பைபிள் கூறுகிறது. சகல வித நோய்களையும் தீராத வியாதிகளையும் சுகமாக்க இயேசு வல்லவர்.

**பயம் :** இயேசு நம்மை பயத்திலிருந்து விடுவிக்கிறார். ஜீவ காலமெல்லாம் மரண பயத்தினாலே பிடிக்கப்பட்டுள்ள யாவரையும் விடுதலைபண்ண இயேசு பிறந்தார் என்று வேதம் கூறுகிறது (எபி.2:13). இயேசு பிறந்த பொழுது பலமுறை "பயப்படாதிருங்கள்" என்ற நற்செய்தியை தூதர்கள் ஜனங்களுக்கு அறிவித்தார்கள் (லூக்கா 1:13, 30; 2:10; மத்தேயு 1:20, 24). பயம் ஒரு கொடுமையான உணர்ச்சி. எதிர்காலத்தைக் குறித்த பயம், மரண பயம், தோல்வி பயம் என்று பலவித பயங்கள் இன்று மனிதனை வாட்டுகின்றன. ஆனால் இயேசு இவையெல்லாவற்றிலிருந்தும் நம்மை விடுவிக்கிறார்.

### 3. பிசாசின் கிரியைகளை அழிக்க : (To RUIN the works of Satan)

பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே மனுஷகுமாரன் வெளிப்பட்டார் என்று வேதம் கூறுகிறது (1 யோவான் 3:8). பிசாசு திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறான். ஆனால் நானோ உங்களுக்கு ஜீவன் கொடுக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன் (யோவான் 10:10) என்று இயேசு கூறினார். பிசாசின் வல்லமையில் அகப்பட்ட பலரை இயேசு விடுவித்தார் (அப்.10:38). இறுதியில் சிலுவையில் பிசாசை ஜெயித்து, அவன் கிரியைகளை அழித்தார். துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொலோ.2:15). இயேசுவை ஏற்றுக்கொண்டு வசனத்தின்படி வாழும் ஒவ்வொருவருக்கும் பிசாசின்மேல் ஜெயத்தை தேவன் தருகிறார் (1 யோவான் 2:14). பொல்லாங்கனாகிய பிசாசு நம்மை தொடமுடியாது (1 யோவான் 5 : 18). அல்லேலூயா!

### இயேசுவுக்கு உங்கள் வாழ்க்கையில் இடம் கொடுங்கள்

உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தங்கள் இருதயத்தில் யாரெல்லாம் இடம் கொடுக்கிறார்களோ அவர்களெல்லாம் தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள் என்று வேதம் கூறுகிறது (யோவான் 1:12). இயேசு இன்றும் உங்கள் இதயக் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறார் (வெளி.3:20). அவருக்கு உங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுக்கும்பொழுது உங்கள் உள்ளத்தில் அவர் வருவார். விடுதலையும் சமாதானமும் அளிப்பார். இன்று உங்கள் உள்ளத்தில் இயேசுவுக்கு இடம் உண்டா?

---


தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**



**Rev. Jerry Daniel**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, Trichy - 620 001
Cell : 94434 15484



# தேவன் தேடும் மனிதன்

Rev. I. அலெக்ஸாண்டர்
விஷன் 2020 ஜெப ஒருங்கிணைப்பாளர்

எசேக்கியேல் 22:30-ல் நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன் என்று வாசிக்கிறோம். தலைவர்கள் மத்தியிலும், ஜனங்கள் மத்தியிலும் யூதாவெங்கும் பரிசுத்த குலைச்சல் காணப்பட்டபடியினால் மக்களை தேவன் பக்கம் திருப்பிக் கொண்டுவர முயற்சி செய்யும் ஒரு மனிதனைக் கூட தேவனால் கண்டுகொள்ள முடியவில்லை. உலக சிநேகம், உலகத்துக்காக எதையும் விட்டுக்கொடுத்து வாழும் நிலையில் சபைகள் இருப்பதினால் பரிந்துபேசும் ஜெபத்தினால் திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனிதனைக் கூட தேவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆவிக்குரிய நிலையில் சீரழிந்து கொண்டிருக்கும் நிலையைக் குறித்தோ, ஒழுக்கநிலை குறித்தோ தேவனை நோக்கிக் கூப்பிடும் ஒருவர்கூட இல்லை.

2 நாளா.7:14-ல் நாம் காண்கிறபடி தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, அவருடைய முகத்தைத் தேடி, பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பி, தேசத்திற்காக, தேசத்தின் எழுப்புதலுக்கு நேராக மக்களை வழிநடத்த, பரிந்துபேச தேவன் தம்முடைய இருதயத்திலிருந்து ஏற்ற மனிதர்களை தேடிக்கொண்டிருக்கிறார். பல நல்ல மனிதர்கள் கூட ஒருவித பயத்தின் ஆவியினாலும் ஆபத்தில் சிக்கிக்கொள்வதை விட உலகத்தோடு இணைந்து வாழ்ந்துவிடலாம் என்று மௌனமாக இருந்து விடுகிறார்கள். இன்றைய மிகப்பெரிய தேவை எஸ்தரைப்போல; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம். இவ்விதமாகச் சட்டத்தை மீறி ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன். நான் செத்தாலும் சாகிறேன் என்று துணிந்து நிற்கிறவர்களையும் (எஸ்தர் 4:16). என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு (தேசத்திற்கு) வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்? (எஸ்தர் 8:6) என்று முறையிடும் நபர்களையுமே தேடிக்கொண்டிருக்கிறார். ஏசாயா 59:16-ல் ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார் என்று வாசிக்கிறோம்.

## தேவன் தேடும் மனிதர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்?

### 1.ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணவேண்டும்

யாக்.5:16-ல் நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது என்று வாசிக்கிறோம். இதுதான் பரிந்துபேசும் ஜெபம். 1சாமு.12:23-ல் நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில், கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன். அது எனக்குத் தூரமாயிருப்பதாக. நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன் என்று சாமுவேல் கூறுகிறார்.

### 2. நம்முடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்காக வேண்டுதல் செய்ய வேண்டும்

ஆதி.25:21-ல் “மலடியாயிருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு கர்த்தரை

நோக்கி வேண்டுதல் செய்தான். கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டருளினார். அவன் மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள்" என்று வாசிக்கிறோம். குடும்பத்தில் புருஷன் மனைவிக்காகவும், மனைவி புருஷனுக்காகவும், பிள்ளைகள் பெற்றோருக்காகவும், பெற்றோர் பிள்ளைகளுக்காகவும் விண்ணப்பம் பண்ணவேண்டும். அப்பொழுது நம்முடைய வீடு சமாதானமுள்ள வீடாகவும், சந்தோஷமுள்ள வீடாகவும் காணப்படும். நாமும் யோசுவாவைப்போல் "நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்" (யோசுவா 24:15) என்று சொல்லுவோம்.

**3. சபை மக்களுக்காக விண்ணப்பம் பண்ணவேண்டும்**

யாத்.32:11-13 இந்த வசனங்களில் கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை அழித்துப்போட எண்ணியபோது மோசே கெஞ்சி பிரார்த்தித்தான் என்று வாசிக்கிறோம். இது ஒரு பரிந்துரை ஜெபம். 1சாமு.7:9-ல் சாமுவேல் இஸ்ரவேலுக்காகக் கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டான்; கர்த்தர் அவனுக்கு மறுமொழி அருளிச்செய்தார் என்று வாசிக்கிறோம். கொலோ.4:12-ல் எப்பாப்பிரா எப்பொழுதும் ஜெபங்களில் போராடுகிறவனாக இருந்தான் என்று பவுல் குறிப்பிடுவதைக் காண்கிறோம். தேவன் இப்படிப்பட்டவர்களையே தேடிக்கொண்டிருக்கிறார்.

**4. எருசலேமின் சமாதானத்திற்காக விண்ணப்பம் பண்ணவேண்டும்**

சங்கீதம் 122:6-ல் எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக் கொள்ளுங்கள் என்று எழுதப்பட்டிருப்பதை காண்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 10:1-ம் வசனத்தில் சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது என்று குறிப்பிடுகிறார். எனவே நாம் யூதர்களுக்காக விண்ணப்பம் பண்ண வேண்டும். எருசலேமுக்காக மாத்திரமல்ல. நம்முடைய தேசத்திற்காகவும் ஜெபிக்க வேண்டும். தேசத்தைக் குறித்த பாரம் நமக்கு வேண்டும்.

**5. பகைவர்களுக்காக பரிந்து பேசி ஜெபிக்க வேண்டும்**

இயேசு தம்மை சிலுவையில் அறைந்த போர்ச்சேவகருக்காக லூக்.23:24-ல் பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்று தேவனை நோக்கி வேண்டிக்கொண்டார். மேலும் மத்.5:44-ல் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் என்றார்.

**6. தேவ ஊழியர்களுக்காக நாம் வேண்டிக்கொள்ள வேண்டும்**

2 தெச.3:1,2 வசனங்களில் எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள் என்றும், எபே.6:19,20 ஆகிய வசனங்களில் ...நான் தைரியமாய் என் வாயைத்திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள் என்றும் பவுல் கூறினார். பேதுரு சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது சபையார் மிகவும் ஊக்கமாக தேவனை நோக்கி ஜெபம் பண்ணினார்கள் என்று அப்.12:6-ல் வாசிக்கிறோம். தேவ ஊழியர்களுக்காக ஜெபிக்க நம்மை ஒப்புக்கொடுப்போம்.

**7.சிநேகிதர்களுக்காகவும், விசுவாசிகளுக்காகவும் வேண்டுதல் செய்ய வேண்டும்**

யோபு 42:10-ல் யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார் என்றும், எபே.6:18-ல் எந்த சமயத்திலும், சகல

விதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள் என்று எழுதுகிறார். நம்முடைய சிநேகிதர்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டார்களா? நம்முடைய சபையில் உள்ள விசுவாசிகளின் நிலை என்ன? அவர்கள் தேவை என்ன? என்று அறிந்து உண்மையாய் ஜெபிக்கிறவர்களை தேவன் தேடிக்கொண்டிருக்கிறார்.

கடைசியாக, நாம் ஒருவருக்கொருவர் வேண்டுதல் செய்ய வேண்டும் என்ற சத்தியத்தை மறவாமல் ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ண, வியாதிப்பட்டவர்கள் குடும்பத்திலுள்ளவர்கள், சபைமக்களுக்காக எருசலேமின் சமாதானத்திற்காக, பகைவர்களுக்காக, தேவ ஊழியர்களுக்காக, தேசத்திற்காக விண்ணப்பம் பண்ண பரிந்துபேசும் ஜெபத்தில் ஈடுபட தேவன் நம் யாவருக்கும் கிருபை செய்வாராக. ரோமர் 8:26-ல் பரிசுத்த ஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் என்றும், எபி.7:25-ல் இயேசு நமக்காக வேண்டுதல் செய்கிறார் என்றும் வாசிக்கிறோம். நாமும் விண்ணப்ப ஜெபம் மற்றும் பரிந்துபேசும் ஜெபத்தில் அதிகமாக நம்மை அர்பணிக்க தேவன் கிருபை செய்வாராக. அல்லேலூயா!

---

## எல்லாம் இயேசுவே

பல துறையில் உள்ள கலைஞர்கள் இயேசுவை கீழ்கண்டவாறு வர்ணிக்கின்றனர்

- வானசாஸ்திரம் இவரை ... விடிவெள்ளி நட்சத்திரம் என அழைக்கிறது (வெளி. 22:16)
- சமையல்கலை வல்லுநருக்கு இவர்... ஜீவ அப்பம் (யோவான் 6:18)
- தச்சர் சொல்கிறார்... இவரே வாசல் (யோவான் 10:7)
- கட்டிட தொழிலாளி... இவரே மூலைக்கு தலைக்கல் என்று அழைக்கின்றார் (எபே. 5:23)
- சபை இவரை... சபையின் தலை என்கிறது (எபே. 5:23)
- மின் பொறியாளர் இவரை... உலகின் ஒளி என்கிறார் (யோவான் 8:12)
- காட்டிலாக்கா இவரை... ஜீவ விருட்சம் என்கிறது (வெளி. 22:14)
- புவி ஆராய்ச்சியாளர் இவரை... கன்மலை என்கின்றனர் (1 கொரி.10:4)
- அரசாங்கம் இவரை... ஆளுநர் என்கிறது (லூக்கா 23:47)
- பத்திரிக்கை துறை இவரை... இவரே சத்தியம் என்கிறது (யோவான் 17:6)
- வக்கீல்கள் இவரை... மத்தியஸ்தர் என்கின்றனர் (1 தீமோ. 2:5)
- நாட்டாமை இவரை... ஆலோசனைக் கர்த்தர் என்கின்றனர் (ஏசாயா 9:6)
- கால்நடை துறை இவரை... பிரதான மேய்ப்பன் என்கிறது (1 பேதுரு 5:4)
- மருத்துவ துறை இவரை... இவரே பரிகாரர் என்கிறது (யாத். 15:26)
- சமுத்திர ஆராய்ச்சியாளர் இவரை... ஜீவதண்ணிருள்ள நதி என்கின்றனர் (வெளி 22:1)
- புகைப்படக்காரர் இவரை... தேவனின் சாயல் என்கின்றனர் (1 கொரி 4:4)
- கைதிகள் இவரை... விடுவிக்கிறவர் என்கின்றனர் (ரோமர் 15:26)
- விரிவுரையாளர்கள் இவரை... தேவனுடைய ஞானம் என்கின்றனர் (1 கொரி. 1:24)
- பாவிகள் இவரை... பாவிகளின் சிநேகிதன் என்கின்றனர் (எபி. 2:10)
- போர்வீரர்கள் இவரை... சமாதான பிரபு என்கின்றனர் (ஏசாயா 9:6)
- கல்வியாளர் இவரை... ஆசானே என்கின்றனர் (யோவான் 13:13)
- வேத வல்லுநர் இவரை... அபிஷேகிக்கிறவர் என்கின்றனர் (யோவான் 1:13)
- போக்குவரத்து துறையினர் இவரை... இவரே வழி என்கின்றனர் (யோவான் 14:6)
- விலங்கியல் துறை இவரை... யூதாவின் சிங்கம் என்கின்றனர் (வெளி. 5:5)
- கப்பல் பணியாளர் இவரை... இரட்சிப்பின் அதிபதி என்கின்றனர் (எபி. 2:10)

அவரின் பிறப்பை கொண்டாடும் நமக்கு.... இவர் யார்?
" கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக்கா 2:11)
இந்த அன்பின் இரட்சகரை பட்டணம் முழுவதும் பறைசாற்றுவோம்!

---

# பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்குமுள்ள ராஜ்யத்தின் சுவிசேஷம்




## Rev. எட்வின் பிரபாகர்

இயக்குநர் : தமிழ் பிரதேச வடகிழக்கு மிஷன் இலாக்கா


கிறிஸ்துவுக்குள் அன்பான போதகர்கள், விசுவாசிகள் அனைவருக்கும் தமிழ் பிரதேச வடகிழக்கு மிஷன் இலாக்காவின் சார்பாக அன்பின் இனிய வாழ்த்துக்கள். நமது தேவன் வடகிழக்கு மிஷன் இலாக்கா ஊழியங்களை ஆசீர்வதித்து வருகிறபடியால் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். கொரானா தொற்று காலங்களிலும் வடமாநிலங்களுக்கு தவறாது உதவிச் செய்து, ஜெபித்து, தாங்கி வந்த நமது தலைவர்கள், போதகர்கள், விசுவாச குடும்பங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீஷர்களோடு பகிர்ந்து கொண்ட அவரின் இருதய பாரத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

மத்.24:14 ராஜ்யத்தினருடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்... என்று தீர்க்கமாக முன்னுரைத்தார்.

கடைசி காலங்களில் ஜீவிக்கும் நாம் செய்யவேண்டிய தேவ ராஜ்ஜியப் பணியை இயேசு இங்கு சுட்டிக் காட்டுகிறார்.

### ராஜ்ஜிய புத்திரரின் பாரம்

முற்காலத்தில் அக்கிரமங்களிலும், பாவத்திலும் மரித்து கிடந்த நம்மை இயேசு கிருபையாக உயிர்பித்து, இராஜ்யத்தின் புத்திரராக மாற்றியுள்ளார். இன்று நம் சபையாய் கிறிஸ்துவின் பாரத்தை தம் இருதயத்தில் பெற்று, அதை பாரமாக்கி, செயலாக்கி, வாழ்க்கையாக்கி, ஜீவித்திட நாம் கிறிஸ்துவிடம் வந்து சேர்ந்திருக்கிறோம். லௌகீக கவலைகள் நம் இருதயத்தை பாரமாக்காமல், நம் ஆத்துமாவைக் காத்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தை குறித்த பாரத்தோடு செயல்பட தேவன் கிருபை செய்வாராக!

ரால்ப் வின்டர் இப்படி குறிப்பிட்டுள்ளார். மிஷன் ஊழியம் வேதத்தின் அடிப்படையிலானது என்பதல்ல, வேதத்திற்கு மிஷன் ஊழியம் தான் அடிப்படை என்று குறிப்பிட்டார். ராஜ்ய சுவிசேஷ பாரம் பெற்ற நாம் சுவிசேஷத்திற்காக உயிர் வாழ பரந்து விரிந்து கிடக்கும் இந்திய தேசம் முழுமையும் சுவிசேஷம் கொண்டுச் செல்ல தேவன் கிருபை செய்வாராக! பவுல் அப்போஸ்தலனும் தன் ராஜ்யம் முழுமையும் சுவிசேஷத்தைக் கொண்டுச் செல்ல தேவன் கிருபை செய்வாராக! பவுல் அப்போஸ்தலனும் தன் ராஜ்யம் முழுமையும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றதின் காரணம் இந்த சுவிசேஷ பாரமேயாகும் (ரோமர் 15:19). நமது பாரத தேசத்திலும் மத்தேயு 8:11-ன்படி அநேகர் கிழக்கிலும் மேற்கிலும் இருந்து வந்து பரலோக ராஜ்யத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தி இருப்பார்கள். நமது பாரத தேசம் கிறிஸ்துவினுடையதாக மாற, பாரப்பட, உபவாசத்தோடும், ஊக்கத்தோடும் ஜெபித்திட, கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருக்கி ஏவிட, அறுப்புக்கு எஜமான் தரும் மாபெரும் அறுவடைக் காண பெற்றுகொள்ள தேவன் கிருபைச் செய்வாராக!.

## ராஜ்யத்தின் சுவிசேஷ பணி

சுவிசேஷ பாரம் நம்மை உண்மையாய் பணிச் செய்திட ஊக்குவிக்கிறது. நமது தமிழ் பிரதேச மிஷன் இலாக்காக்களின் மூலம் வட மாநிலங்கள் சென்று ஊழியம் செய்திடவும், நமது சபை இப்பணிக்காக தவறாது ஜெபித்திடவும், ஊழியர்களை அனுப்பிடவும், தியாகமாய் கொடுத்திடவும் நம்மை பணிக்கிறது.

C.A. ஸ்பர்ஜன் என்ற தேவ மனிதர் இப்படி கூறினார். “முழு சுவிசேஷத்தை முழு உலகிற்கும் பிரசங்கிப்பதே முழு சபையின் முழு வேலையாகும்”. இன்று நமது சபையின் ஒவ்வொரு விசுவாசிகளையும் தேவன் இராஜ்யத்தின் சுவிசேஷ பணி செய்திட, எழும்பி பிரகாசிக்கச் செய்வாராக.

மத்.24:14.யில் கிறிஸ்து சுவிசேஷத்தை, ராஜ்யத்தின் சுவிசேஷம் என்றே சீஷர்களிடம் குறிப்பிட்டார். சுவிசேஷ பாரத்தோடு மட்டுமல்லாது சுவிசேஷ பணி என்னிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது என்ற அர்ப்பணமும், பொறுப்பும், ஈடுபாடும், செயல்பாடும் நம்மூலம் உண்டாவதாக. ஆண்டவராகிய இயேசு சீஷர்களுக்கும் ஜனங்களுக்கும் காண்பித்த மாதிரியும் அதுவாகும் மத்.4:23. இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்து ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார். நமது சபையின் ஒவ்வொரு விசுவாசிகளும் இயேசு செய்தது போலவே சுவிசேஷ பணி செய்ய ஆழமாய் அர்பணித்து, அற்புத அடையாளங்களோடு கிறிஸ்துவே தேவன் என்று நிரூபிக்கும் அடையாளங்களாக இருக்க தேவன் கிருபை செய்வாராக.

## ராஜ்ஜியத்தின் சுவிசேஷ பிரகடனம்

மத்.24:14–ல் இயேசு ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்பட வேண்டும் என்பதை ஆழமாய் சுட்டிக் காட்டினார். கிறிஸ்துவின் அன்பை ருசித்த ஒவ்வொருவரும் ராஜ்ய சுவிசேஷத்தை பிரகடனம் படுத்த கடனாளிகளாய் இருக்கிறோம். தேவன் ஏதோமொருவரை நம் வாழ்வில் அனுப்பி நமக்கு அறிவிக்கப்பட்டதாலேதான் நாம் இன்று தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம். நாம் பெற்ற ஆத்தும இரட்சிப்பினை பாரத தேசம் முழுவதும் பிரகடனப்படுத்த நம்மை அர்ப்பணிப்போமாக. நம் குடும்பத்தின் பிள்ளைகளில் முதற்பேருகளை தேவ சுவிசேஷத்தை வட மாநிலங்களில் போய் அறிவிக்க அர்ப்பணிப்போமாக. இன்றே செயல்படுவோமாக. ரோமர் 10:14,15–ல் அனுப்பாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள். பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள். இயேசு கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்படாவிட்டால் எப்படி விசுவாசிப்பார்கள். 138 கோடி ஜனங்களுக்கும் இராஜ்யத்தின் சுவிசேஷத்தை நம் தலைமுறையில் நாம் கொண்டு செல்வோமாக. நமது சபைகள் இதை தரிசனமாக கொண்டு செயல்பட தேவன் கிருபை செய்வாராக. மைக் டச்சரா என்ற தேவ மனிதன் இப்படி கூறுகிறார். “ஒரு பெரிய சபையின் அடையாளம் என்பது எத்தனை பேர் அமர வைக்கப்படுகின்றனர் என்பதல்ல, எத்தனை பேர் அனுப்பப்படுகின்றனர்” என்பதேயாகும் என்று பறைசாற்றினார். இன்று நற்செய்தியை பிரசங்கிக்கின்ற நாம் இயேசுவைப்போல கிராமம் கிராமமாக, பவுலைப் போல பட்டணங்கள் தோறும் இந்தியாவில் அனைத்து மாவட்டங்களுக்கும், மாநிலங்களுக்கும் கொடுக்க தேவன் கிருபை செய்வாராக.



# தசமபாகம் குறித்த சர்ச்சை


Rev. J. தேவதாசன் கலையரசன்

மூத்த போதகர், பெத்தேல் ஏஜி. சர்ச், குளத்தூர்


தசமபாகம் குறித்த சர்ச்சை சமீபகாலங்களில் சமூக ஊடகங்களில் அதிகளவில் வெளிப்படையாக விவாதிக்கப்படுகின்றன. பெந்தெகொஸ்தே சபைகளில் இரட்சிப்பு, ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம், பரிசுத்தம் எந்தளவு வலியுறுத்தப்படுகிறதோ அந்தளவு தசமபாகமும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. பொதுவான சபைகளிலிருந்து பெந்தெகொஸ்தே சபையை வேறுபடுத்திக் காட்டும் அநேக அடையாளங்களில், ஒன்றாக தசமபாகமும் இருக்கிறது. பொதுவான சபைகளில் சங்க காணிக்கை (சந்தா) அறியப்பட்டுள்ள அளவு தசமபாகம் என்ற ஒன்றைக் கேள்விப்படாதவர்கள், பயிற்சிக்காதவர்களே அதிகம். பெந்தெகொஸ்தே சபைகளில் ஞானஸ்நான வகுப்பிலேயே கூட, சில சபைகளில் தசமபாகப் போதனையும் இணைத்திருக்கிறார்கள். எனவே சபையில் இணைந்த மூன்று மாதங்களில் எந்த ஒரு புதிய விசுவாசியும் தசமபாகம் என்றால் என்ன? கொடுத்தால் ஏற்படும் விளைவுகள் என்ன? என்பதை அறிந்திருக்கிறார்கள். பெந்தெகொஸ்தே சபைகளின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் உள்ள பல காரணங்களில் மிக முக்கிய காரணம் **தசமபாகமும்** ஒன்று என்பதையும் மறுக்க இயலாது.

இப்படியிருக்கும் சூழ்நிலையில் தசமபாகம் இன்று சர்ச்சையாக்கப் பட்டிருக்கிறது. ஏன் சர்ச்சையாக்கப்பட்டுள்ளது? என்னென்ன கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன? அதற்கான பதில் என்ன என்பதை ஒரே கட்டுரையில் எழுதிவிட இயலாது. ஒரு சில போதக நண்பர்கள் இது தேவையற்ற வேலையாகவும் கருதுகிறார்கள். ஏனென்றால் எங்கள் விசுவாசிகள் தசமபாகம்-சர்ச்சையாக்கப் பட்டிருப்பதை அறிந்திராதவர்கள். அவர்களுக்கும் இதை தெரியப்படுத்தி, கொடுத்துப் பழகியவர்களையும் ஏன் களங்கப்படுத்த வேண்டும்? என கேட்கிறார்கள்.

முன்பு ஒரு போதும் தசமபாகம் குறித்த எந்த ஒரு எதிர்மறையான செய்தியையும் கேட்டிராத சபை விசுவாசிகள் கூட, இந்த கொரோனா காலத்தில் தசமபாகம் குறித்து பலவிதமான வேறுபட்ட, முரண்பட்ட கருத்துக்களை (சர்ச்சை) கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு ஊடகங்களில் பார்த்துக் கொண்டிருக் கிறார்கள். நமது கலாச்சாரத்தின்படி கேள்வி கேட்க அச்சப்படுபவர்கள், அனுமதிக்கப்படாதவர்கள்... தங்கள் சந்தேகங்களை மனதிற்குள் மறைத்துக் கொண்டே தொடர்ந்து தசமபாகம் செலுத்தலாம். ஆயினும் முன்பு போல விசுவாசிகள் உற்சாக மனதுடன் கொடுப்பது பாதிக்கப்படும். எனவே “தசமபாகம் குறித்த” சரியான போதனையை, பார்வையை யாவரும் அறிந்துகொள்ள செய்வது அவசியம்.

தசமபாகம் குறித்து எழுந்துள்ள தர்க்கங்களுக்குள் உட்சென்று, அதற்கான வலுவான பதில்களை கொடுப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல, ஏனென்றால் இது வெளியிலிருந்து வரும் அந்நிய குரல்களுக்கு பதில் கொடுக்க எழுதப்பட்டது அல்ல, உள்ளே இருக்கும் நம்மவர்கள் களங்கப்படாமல் இருக்க, என்ன தகவல்கள் கொடுக்கப்பட வேண்டும் என்பதை ஆராய முயற்சிக்கும் கட்டுரை, இந்த வரையறைகளை அறிந்து (Limitations) முழுமையாகவும், பொறுமையாகவும் வாசிக்கவும்.

## I. நம்மவர்களுக்கு ஏற்படும் மனநெருடல்கள்

தசமபாகத்தைக் கொடுக்கப் பழகி அதன் மூலம் ஆசீர்வதிக்கப்பட்ட சாட்சியுடைய விசுவாசிகள் கூட, குழம்பும்படியான அந்நிய குரல்கள் ஊடகங்களின் வாயிலாக திணிக்கப்படுகிறது. அப்படி அவர்களை கலங்கடிக்கும் போதனைகள் சில.

1. தசமபாகம் முழு வேதாகமும் போதிக்காதபடியினால் வேத அடிப்படையற்றது. குறிப்பாக புதிய ஏற்பாட்டு போதனையல்ல.
2. இன்றைய சபை அமைப்பும் புதிய ஏற்பாட்டு கால சபை அமைப்பும் வேறு, ஒரு போதகரை மையமாக கொண்ட இன்றைய சபைகளில் 'போதகர்களின் வளர்ச்சிக்காகவே' நீங்கள் தசமபாகம் கொடுக்கிறீர்கள். எனவே நீங்கள் கொடுக்கும் தசமபாகம் உங்களுக்கு ஆசீர்வாதமாக இராது.
3. தசமபாகம் என்பது நியாயப்பிரமாணமே தான். அதை நீங்கள் மீண்டும் பின்பற்ற தொடங்கினால் கிறிஸ்து உண்டாக்கிய சுயாதீனப் பிரமாணத்திலிருந்து விலகி, மீண்டும் நியாயப்பிரமாணத்திற்கு அடிமைப்படுகிறீர்கள். சாபத்தை வருவிக்கிறீர்கள்.
4. கர்த்தருக்கு நேரடியாக தசமபாகத்தை கொடுக்க முடியாதே. சபைகளுக்குத் தானே கொடுக்க வேண்டும் என நினையாதிருங்கள். அப்படி கர்த்தருக்கு நேரடியாக கொடுக்க விரும்பினால் ஏழைகளுக்கு கொடுங்கள்... (மாற்கு 25:40).

இன்று இதுபோன்ற ஏராளமான முரண்பட்ட கருத்துக்களை, பிரசங்கிக்கிறார்கள், போதிக்கிறார்கள், ஏன் நாடகவடிவில் கூட கற்றுக் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட குழப்பமான போதனைகளை அறிந்தும் தசமபாகம் கொடுத்து ஆசீர்வதிக்கப்பட்ட விசுவாசிகள் எவரும் இடறலடையவில்லை. தொடர்ந்து கொடுத்து வருகிறார்கள்.

## II. தசமபாகம் விமர்ச்சிக்கப்படுவதின் காரணங்கள்

1. தசமபாகம் குறித்து வேத புத்தகத்தில் 41 வசனங்கள் உள்ளன. பழைய ஏற்பாட்டில் 31, புதிய ஏற்பாட்டில் 10. புதிய ஏற்பாட்டில் உள்ள 10 வசனங்களும் தசமபாகத்தைப் பற்றிய சில தகவல்களைக் கொடுக்கின்றன. ஆனால் எங்குமே தசமபாகம் கொடுக்க வேண்டும் என்ற நேரடியான கட்டளை புதிய ஏற்பாட்டில் இல்லை. முழு வேதாகமமும் போதிக்கும் சத்தியத்தைத் தானே "வேத அடிப்படை கொண்டது என்கிறோம்" அப்படியானால் 'தசமபாகம்' என்பதை வேதாகம அடிப்படை கொண்டது என்று எப்படி வலியுறுத்த முடியும் என்கிறார்கள், விமர்சிப்பாளர்கள்.
2. பெந்தெகொஸ்தே சபைகள், புதிதாக பிறந்த விசுவாசிகளை காணிக்கை கொடுப்பதற்கு பழக்குவிக்க தசமபாகப் போதனையையே மிகவும் சரியான வழிமுறையாக காண்கின்றன (Strategy). நாம் அனைவரும் தசமபாகம் குறித்து போதிக்க பயன்படுத்தும் வசனங்கள் ஏராளம் (41 வசனங்கள்). அதில் ஒன்று கூட கட்டளை வாக்கியமாக புதிய ஏற்பாட்டு மேற்கொள்காட்ட முடியாததுதான் நடைமுறை சிக்கல்.
3. பெந்தெகொஸ்தே சபைகளில் மட்டும் தான் தசமபாகம் குறித்து கடந்த 100 வருடங்களாக, அளவுக்கு அதிகமாக வலியுறுத்தப்படுவதாக விமர்சிக்கும் சிலர், மூர்க்கத்தனமாக எதிர்க்கிறார்கள்.
4. சபைகளின் வளர்ச்சி, போதகர்களின் மேல் ஏற்படும் வெறுப்பும் 'தசமபாகத்தை' கடுமையாக விமர்சிக்க வைக்கிறது.

## III. காணிக்கை கொடுப்பதில் ஒரு வடிவமே (Form) தசமபாகம்

1. காணிக்கை கொடுத்தல் என்பது முதல் குடும்பத்திலிருந்தே ஆரம்பித்துவிட்டது. அதை யாரும் விமர்சிக்க முடியாது. கடவுள்-மனித உறவில் எந்த ஒரு போதனையும் இன்றி தானாக ஏற்பட்ட ஒரு பழக்கம்தான் காணிக்கை கொடுப்பது (ஆதி.4:3-5). புதிய ஏற்பாட்டிலும் 26 இடங்களில் காணிக்கையின் சிறப்பு குறித்த குறிப்புகள் இருக்கின்றன. எனவே 'காணிக்கை' செலுத்துவது என்பது முழு வேதாகம அடிப்படை கொண்டது. அது நியாயப்பிரமாணத்தினால் உண்டானதல்ல. படைப்பின் காலத்திலிருந்தே உண்டானது. **மனிதன் பிரமாணமாக** இயல்பாக மனிதருக்குள் உருவானது.

2. கிறிஸ்தவ மதம் தான் காணிக்கையை போதிக்கிறது என்றில்லை. அனைத்து மதங்களிலும் காணிக்கை செலுத்துவது என்பது இயல்பாக உள்ள வழக்கம். இந்துக்களில் கூட 'வெறுங்கையாய் ஆலயத்திற்கு போகக்கூடாது' என கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏழைகள், இலவசமாக கிடைக்கும் சாலையோரம் உள்ள மரங்களின் மலர்களையாவது காணிக்கை செலுத்த வேண்டும் என்கிற நியதியைக் கைக்கொள்கிறார்கள்.

3. காணிக்கை பெறுவதை சில சபைகளில் சந்தாவாக, நன்கொடையாக வாங்குகிறார்கள். சில சபைகளில் தசமபாகமாக வாங்குகிறார்கள். அவ்வளவு தான் வித்தியாசம். காணிக்கை கொடுப்பது என்பது மாற்ற முடியாத வேதாகம கொள்கை (Principle). அதனைக் கொடுக்கும் விதம் தான் (Form) பெயர்தான் பெந்தெகொஸ்தே சபைகளில் **தசமபாகம்** என்றிருக்கிறது.

4. பவுல் தனக்காக எப்போதாவது காணிக்கை கேட்டாரா? என்பதற்கு நேரடி ஆதாரம் இல்லை. ஆனால் தனது சொந்த தேவைக்காக (தருமப்பணமல்ல) காணிக்கை கொடுத்த பிலிப்பிய சபையாருக்கு மனமுவந்து நன்றி தெரிவித்திருப்பது பதிவு செய்யப்பட்டுள்ளது (பிலி.4:16-19).

5. இயேசு கிறிஸ்துவே தனது மற்றும் தன்னைச் சார்ந்த ஊழியர்களின் தேவைக்கும், ஊழியங்களின் தேவைக்கும் ஒரு நிதி ஆதரவுக் குழுவையே வைத்திருந்தார். (Sponser Team) என **புதிய ஏற்பாடு** பதிவு செய்திருக்கிறது (லூக்கா 8:3). இப்படியிருக்க ஊழியங்களுக்கும், ஊழியர்களுக்கு 'காணிக்கை' பெறுவதை விமர்சிப்பவர்கள், இயேசு கிறிஸ்துவுக்கும் மிஞ்சின நீதிமான்களே.

6. எனவே 'காணிக்கை' கொடுத்தலை அற்பமாய் எண்ணாமல், நன்றியுணர்வுடன் படைப்போம். ஆம், கொடுத்து பழகாதவர்கள் குறைந்தபட்சம் தசமபாகம் என்ற விகிதத்தில் கொடுக்கப் பழகுங்கள். இதுவரை தசமபாகம் கொடுத்து வருபவர்கள், கடமை முடிந்தது என அதை சமய சடங்காக மாற்றாமல், உளப்பூர்வமாய் அதற்கும் அதிகமாக கொடுக்கப் பழகுங்கள். ஆம் தசமபாகம் என்ற குறுகிய எல்லைக்குள் நின்றுவிடாமல், திருப்தியடைந்துவிடாமல் எவ்வளவு அதிகமாக கொடுக்க முடியுமோ அந்தளவு கொடுத்து சபைகளையும், ஊழியர்களையும் தாங்குவோம்.

## IV. அறிய வேண்டிய முக்கியமான உண்மை

1. தசமபாகம் கொடுத்தால் தான் ஆசீர்வாதம் என்ற அழுத்தம் கொடுப்பதைத் தவிர்ப்போம். அதே சமயம் காணிக்கை கொடுக்க ஊக்குவிக்க வேண்டும். காணிக்கை பெறுவது (யாத்.25:1,2), கொடுப்பது (2 கொரி.9:7) என்கிற சத்தியம் முழு வேதாகம அடிப்படையுள்ளது. இதனால் ஏற்கனவே தசமபாகம் கொடுத்துப்

பழகியோர் யாரும் குறைத்து விடக்கூடாது. மாறாக புதிய ஏற்பாட்டு கொடுத்தலின்படி 10க்கும் அதிகமாகவும், தம்மையே கொடுக்கும் அளவும் கொடுக்கப் பழக வேண்டும். (2 கொரி. 8:3).

2. **புதிய ஏற்பாட்டில்** காணிக்கை கொடுக்கப்பட்ட அளவு, விதம் பாராட்டப்பட்டது (லூக்கா 21:2,3). பலன்கள் வாக்குப்பண்ணப்பட்டது (லூக்கா 6:38).

3. காணிக்கை கொடுக்கப்பட்ட விதம், (Form) காரணங்கள், அவ்வப்போது சூழ்நிலைக்கேற்ப மாறிக்கொண்டேயிருந்தாலும், 'காணிக்கை கொடுப்பது' என்பது 'சுகந்த பலியாக' பவுலினால் வர்ணிக்கப்பட்டிருக்கிறது (பிலி. 4:16-19).

4. தசமபாகம் என்பது காணிக்கை கொடுப்பதின் ஒரு வடிவம் தான் (Form) முறை அவ்வளவுதான். சில சபைகளில் தசமபாகம் என்ற பெயரை பயன்படுத்தாமல் நன்கொடை, காணிக்கை என்ற பெயரில், தசமபாகத்திற்கும் அதிகமாக நிதி திரட்டப்படுகிறது. காணிக்கை கேட்பதோ, படைப்பதோ தவறு என்று வேதம் சொல்லாதிருக்க, சபை மேலும், போதகர் மேலும் ஏற்படும் காழ்ப்புணர்வினால் 'தசமபாகத்தை' கண்ணை மூடிக்கொண்டு எதிர்ப்பது என்பது, திருச்சபைக்கெதிராக தொடுக்கும் யுத்தமே. சபை மற்றும் போதகர் மேலுள்ள வெறுப்பினால் 2000 வருடமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிற காணிக்கை செலுத்துவதை கொச்சைப்படுத்தி விமர்சிக்க வேண்டாம்.

5. பெந்தெகொஸ்தே சபைகளின் நிதி ஆதாரத்தை முடக்க சாத்தானும் போராடத்தான் செய்வான். எந்த ஒரு பின்புலமும் இல்லாமல் தனிமனிதனாக ஒரு போதகர் ஒரு பட்டணத்திற்கோ, கிராமத்திற்கோ சென்று, தியாகம் செய்து உழைத்து வளர்த்த சபைகள் தான் பெந்தெகொஸ்தே சபைகள்... இது, இந்தளவு வளர்வதற்கு காரணமாக 'விசுவாசிகளின் தாராளமாய்' கொடுக்கும் ஆற்றலை, விருப்பத்தை கெடுத்துவிட்டால் (2 கொரி. 9:7) பெந்தெகொஸ்தே சபைகளின் வளர்ச்சியை தடுத்து விடலாம் என அவன் போராடுகிறான். இந்த ஆவிக்குரிய யுத்தத்திலும் சபை வெல்லட்டும்.

---

## Portraits of Jesus in John's Gospel

The Word Of God - John 1:1-18
The Son Of Man - John 2:1-11
The Divine Teacher - John 3:1-21
The Soul Winner - John 4:1-30
The Great Physician - John 5:1-9
The Bread Of Life - John 6:22-35
The Fountain Of Living Water - John 7:37-39
The Sympathetic Saviour - John 8:1-11
The Light Of The World - John 9:1-11
The Good Shepherd - John 10:1-16
The Resurrection And The Life - John 11:18-27
The King - John 12:12-19
The Humble Servant - John 13:1-20
The Great Encourager - John 14:1-31
The True Vine - John 15:1-11
The Great Gift Giver - John 16:7-15
The Great High Priest - John 17:1-26
The Model Sufferer - John 18:1-14
The Crucified King - John 19:1-18
The Resurrected Redeemer - John 20:1-18
The Friend Of The Fallen - John 21:1-19



ஆண்கள் ஐக்கிய ஊழிய பகுதி

# சமாதானப் புருஷன்


**Rev. M. இளங்கோ**

மூத்த போதகர், A.G. சர்ச், காவேரிபட்டிணம்


நாம் மிகவும் விரும்புவது குடும்ப சமாதானம். ஆனால் அநேக குடும்பங்களில் சமாதானமில்லாமலிருப்பது வேதனை அளிக்கிறது. சமாதானம் தானாக வராது. சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். நாம் சமாதானமாக இல்லாமல் மற்றவர்களுக்கு சமாதானத்தை கொடுக்க முடியாது.

**எப்படி சமாதானமாக வாழ்வது?**

**1.தனிப்பட்ட வாழ்வில் ஒவ்வொரு ஆண்களும் சமாதானமாக வாழக்கற்று கொள்ளவேண்டும்.**

யார் ஒருவர் தனிப்பட்ட வாழ்வில் சமாதானமில்லாமல் இருக்கிறார்களோ, அவர்களால் யாருடனும் சமாதானமாக வாழ முடியாது.

**தனிப்பட்ட வாழ்வில் சமாதானமாக வாழ சிலவழிகள்**

- எந்த நிலையிலும் என் சமாதானத்தை இழக்கமாட்டேன் என்ற தீர்மானம் உறுதியாக எடுத்து செயல்படுத்த வேண்டும்;.
- என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு என்று விசுவாசிக்கவேண்டும் (பிலி 4:13).
- என்னைவிட ஆண்டவரை அதிகமாக நேசிப்பேன்.
- என் குடும்பத்தைவிட ஆண்டவரை அதிகமாக நேசிப்பேன்.
- எனக்கு உண்டானவைகளைவிட ஆண்டவரை அதிகமாக நேசிப்பேன்.
- எல்லாம் கர்த்தருடையது என்னுடையது எதுவுமில்லை, எதையும் அவர் எடுத்துக்கொள்ள உரிமை உண்டு என்று விட்டுகொடுக்க வேண்டும்.
- என் சந்தோஷத்தை யாரும், எதுவும் பறிக்கமுடியாது என்ற அசைக்கமுடியாத மனநிலை வேண்டும்.

**2.மனைவியோடு சமாதானம்**

- மனைவியோடு ஒருவர் சமாதானமாக வாழ்ந்து காட்டினால் பாக்கியவான்.
- பெண்களின் குணத்தை அறிந்து நடப்பவர் அதிக பாக்கியவான்.
- இதை அறியாதவரானால் மனைவியோடு சமாதானமாக வாழமுடியாது.
- எந்த குடும்பத்திலும் ஆண்கள் அனுசரித்துபோகும் வரை குடும்பம் நன்றாக போகும்.
- ஆண்கள் தங்கள் வழியை திணிக்க ஆரம்பிக்கும்போது சண்டைகள் ஆரம்பமாகி முடிவு வேதனை அளிக்கும்.

**3.சண்டைகள் பலவிதங்களில் வரும்**

- ஆண்களின் குறைவுகளையோ, பெண்களின் குறைவுகளையோ சுட்டிக் காட்டும்போது சண்டைகள் வரும்.
- மாம்ச கிரியைகளினால் அதிக சண்டைகள் வரும்.
- பெண்கள் சோம்பேறித்தனமும், வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்ளாததினாலும் சண்டைகள் வரும்.
- பெண்களின் அதிகார அடக்குமுறை பேச்சால் சண்டைகள் வரும்.
- பகலிலும், இரவிலும் கூட சண்டைகள் வரும்.
- பிள்ளைகளாலும் சண்டைகள் வரும்.

- தங்கள் கடமையை செய்யாதபோது சண்டைகள் வரும்.
- பொருளாதார குறைவுகளாலும் சண்டைகள் வரும்.
- திருத்த முடியாத காரியத்தில் அதிக முயற்சி எடுப்பதால் சண்டைகள் வரும்.
- பிரியமில்லாத காரியங்களை ஒருவருக்கொருவர் செய்வதால் சண்டைகள் வரும்.

### 4.செய்யவேண்டிய காரியங்கள்

- சண்டை போடுவதினால் சமாதானமும் தீர்வும் வராது.
- எப்படி சண்டைபோடுவது என்றல்ல, எப்படி சமாதானத்தை கொண்டு வரவேண்டும் என்று யோசிக்க வேண்டும்.
- யாராவது ஒருவர் அநுசரித்து தான் ஆக வேண்டும்.
- எல்லாம் நிறைவாக இருந்தால் என்ற நிலைமாறி, குறைவிலும் நிறைவாக வாழவேண்டும்.
- தெய்வபயமும், தேவவசனத்திற்கு கீழ்படிதலும், தேவனை மகிமைப்படுத்தும் செயலும் இருக்க வேண்டும்.
- நினைத்ததை சாதித்து விடவேண்டும் என்ற எண்ணம் கூடாது.
- சூழ்நிலை அறிந்து செயல்பட வேண்டும்.
- என்னால் யாரும் வேதனைப்படக்கூடாது என்று தீர்மானம் எடுக்கவேண்டும்.
- சமாதானத்தைக் காத்துக்கொள்ள ஜெபிக்க வேண்டும்.
- எவ்வளவு கேட்டாலும், கேட்டதை அந்தந்த சூழ்நிலையில் செயல்படுத்த வேண்டும்.

### 5.எப்படி சமாதானத்தைக் காத்துக்கொள்வது

- அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும்.
- ஒரு வெடிப்பொருளை வெடித்து பலனை அனுபவிப்பதை விட அதை எப்படி செயலிழக்க செய்யலாம் என்பதே சிறந்த சமாதானம்.
- ஆண்கள் தங்கள் பக்கம் எந்த குறையும் இல்லாமல் காத்துக்கொள்ளவேண்டும்.
- இச்சையடக்கம் உள்ளவர்களாக இருங்கள்.
- மனைவியை எல்லா சூழ்நிலையிலும் நேசியுங்கள், வெறுக்காதிருங்கள்.

### 6.சண்டைகளை சரிசெய்து சமாதானத்தை கொண்டு வருவது எப்படி?

**உதாரணம் : 1**

**கணவர்** : சத்தமாக சொல்லு. காது கேட்கவில்லை.

**மனைவி**: சத்தம்போட்டு சொல்ல எனக்கு பெலனில்லை.

இந்த இருவருடைய பேச்சும் நியாயம்தான். ஆனால் தகவல் போய் சேராததினால் சண்டை வருகிறது. இருவருடைய பேச்சும் ரயில்தண்டவாளத்தைபோல் ஒன்று சேராது.

**தீர்வு என்ன?** இருவரில் ஒருவர்கிட்டபோய் கேட்பதோ, சொல்லுவதோ வேண்டும். சண்டைக்கு வாய்ப்பில்லை

**உதாரணம் : 2**

**மனைவி** : ஒரு உதவியும் செய்வதில்லை.

**கணவன்** : என்னவேலை என்று சொல்லு.

**மனைவி** : நான் சொல்லமாட்டேன். நீங்களே பார்த்து இரக்கப்பட்டு செய்யுங்க.

**கணவன்** : சொன்னாத்தான் செய்வேன்.

**மனைவி** : பார்த்து செய்யுங்கள்.

முடிவில் ஒத்துவராத பேச்சுக்கள். ஒருவர் அநுசரித்தால் எளிமையாக முடிந்துவிடும்.

இப்படி எல்லா பிரச்சனைகளையும் தீர்த்துக்கொள்ளுங்கள். பிசாசுக்கு இடங்கொடாமல் இயேசுவுக்கு கீழ்படிந்து சமாதானமாக வாழ வாழ்த்துகிறேன்.



# எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்

Rev. V.J. பாலஸ்
தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! தேவன் கிருபையையும் சமாதானத்தையும் உங்கள் வாழ்க்கையில் பெருகச்செய்வாராக!

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது! (1தெச. 5:18)

தேவனுடைய பிள்ளைகள் எப்பொழுதும் தேவனை துதிக்க வேண்டும். அதுதான் நம்மைக்குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது. துதிசெய்வதினாலே தேவன் நம்முடைய ஜெபங்களைக்கேட்டு பதில் கொடுக்கிறார். துதிசெலுத்தும்போது சாத்தானுடைய கட்டுகளெல்லாம் அறுந்துபோகிறது. தேவன் மகிமைப்படுகிறார். சங்கீதம் 22:3 வசனத்தின்படி தேவன் துதிகளுக்குள்ளே வாசம்பண்ணுகிறார். நாம் துதிக்கும்போது நம்முடைய உள்ளத்தில் வந்து வாசம்பண்ணுகிறார். அநேகர் துதிக்காததினாலே அவர்களுடைய இருதயம் இருளடைகிறது. ரோமர் 1:21. தேவனைத் துதிக்கவேண்டிய நேரத்தில் நாம் துதிக்காவிட்டால் வீணான சிந்தனைகள் வருகிறது. நம்முடைய இருதயமும் இருளடைகிறது. அப்பொழுது கர்த்தர் நம்மோடு பேசினாலும் நம்மால் விளங்கிக்கொள்ள முடியாது. ஆகவே எப்போதும் எல்லாவற்றிலேயும் தேவனைத் துதிக்கவேண்டும்.

### 1. ஜெபத்தின் எல்லா பகுதிகளிலும் தேவனைத் துதிக்க வேண்டும்

தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்கு கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்த போதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கேதான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்றுவேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான். தானியேல் 6:10 அப்படியென்றால் ஜெபத்தை ஆண்டவர் கேட்டார், ஜெபத்திற்கு பதில் தந்தார் என்று சொல்லி விசுவாசத்தோடு அந்த ஜெபத்தின் கடைசியில் அவன் நன்றி செலுத்துகிறான். நாம் ஜெபம் பண்ணும்போதெல்லாம் ஆண்டவர் நம்முடைய ஜெபத்தைக் கேட்கிறார். அதற்கு பிறகு நன்றி செலுத்தவேண்டும். ஜெபம் பண்ணுவதற்கு முன்னாலும் ஸ்தோத்திரம் செலுத்தவேண்டும். ஜெபத்திலேயும் ஸ்தோத்திரம் செலுத்தவேண்டும். ஜெபம் பண்ணிமுடிந்த பிறகும் தானியேலைப் போல தேவனைத் துதிக்க வேண்டும்.

### 2. தேவனுக்குக் கீழ்படிந்து தேவனைத் துதிக்க வேண்டும்

தானியேல் 3-ஆம் அதிகாரத்தில், நேபுகாத்நேச்சார் ஒரு சிலையை பண்ணுவித்து அதை வணங்கும்படி தேசத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் கட்டளை கொடுத்தான். ஆனால் தேசத்திலுள்ள சகல ஜனங்களிலும் சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ அந்த சிலையை வணங்க மறுத்தார்கள். ஆகையால் நேபுகாத்நேச்சார் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூன்றுபேரையும்

அக்கினிச் சூழையிலே தூக்கிப்போட கட்டளை கொடுத்தான். ஆனால் அவர்களை அக்கினிச் சூளையிலே தூக்கிப்போட்டபோது அந்த மூன்றுபேரைத் தவிர நான்காவதாக தேவகுமாரனுக்கு ஒப்பான ஒருவர் அவர்களோடு அக்கினிச் சூழையிலே உலாவினார். மேலும் அக்கினியானது அந்த மூவர்மீதும் பற்றிக்கொள்ளவில்லை (தானியேல் 3:28). நேபுகாத்நேச்சார் அதைக்கண்டு சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று தேவனைத் துதித்தான். நாம் அற்புதங்கள் நடக்கும்போது மட்டுமல்ல எப்போதும் ஜெபம்பண்ண வேண்டும். தேவனைத் துதிக்க வேண்டும். தேவன் செய்த நன்மைகளுக்கு நன்றி செலுத்த வேண்டும். இங்கே நேபுகாத்நேச்சார் தேவனை துதித்தாலும் அவன் இரட்சிக்கப்படவில்லை. ஆகையால் இரட்சிக்கப்படாதவர்களும் தேவனைத் துதிக்கலாம். தேவனை அறியாதவர்களும் தேவனைத் துதிக்கலாம். ஆனால் தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்படிந்து தேவசித்தம் செய்து தேவனைத் துதிக்கும்போது அந்த துதியை தேவன் அங்கீகரிக்கிறார், ஆசீர்வதிக்கிறார். ஆகவே இதை வாசிக்கிற ஒவ்வொருவரும் நம்முடைய துதி ஆராதனை ஜெபத்தை தேவன் அங்கீகரித்து ஆசீர்வதிக்க வேண்டுமானால் நாம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படிய வேண்டும். தேவனுக்கும் நமக்கும் ஒரு உறவு இருக்கவேண்டும்.

### 3.ஸ்தோத்திரம் செய்வதினாலே பெரிய அற்புதங்கள் நடக்கும்

யோவான் 6-ஆம் அதிகாரத்தில் வாசிக்கும்போது அதில் ஒரு இடத்தில் இயேசு வெகுநேரம் பிரசங்கம் பண்ணிக்கொண்டே இருந்தார். வனாந்திரமான இடம், ஜனங்கள் பசியாயிருந்தார்கள். அப்பொழுது சீஷர்களிடத்தில் கேட்டபோது அந்திரேயா என்னும் சீஷன் ஒரு சிறு பையனிடத்திலிருந்து ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் வாங்கிக் கொண்டுவந்து கொடுத்தான். “இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படியே மீன்களையும் அவர் எடுத்து அவர்களுக்கு வேண்டிய மட்டும் கொடுத்தார்” (யோவான் 6:11). அந்த அப்பத்தை ஆசீர்வதித்து ஸ்தோத்திரம் பண்ணினபொழுது அந்த அப்பமும் மீனும் பெருகினது. அங்கே அற்புதம் நடந்தது. ஆகையால் இப்படிப்பட்ட வனாந்திரமான இடத்தில் நம்பிக்கையில்லாத சூழ்நிலையில் நம்மிடத்தில் இருக்கிற கொஞ்சத்தில் நாம் திருப்தியோடு விசுவாசத்தோடு தேவனைத் துதிக்கும்போது தேவன் அந்த கொஞ்சத்தை அதிகமாக பெருகச் செய்து அற்புதங்களைச் செய்வார். ஆசீர்வதிப்பார். தேவன்தாமே இதை வாசிக்கிற ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து பெருகச்செய்வாராக. ஆமென்.

---

## வைர விழா வாழ்த்துக்கள்

2020 அக்டோபர் 5-ம் தேதி ஊழியப்பாதையில் **60** ஆண்டு (வைர விழா) நிறைவு செய்து **61** ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்து மற்றும் தனது **81**வது பிறந்தநாளையும் கொண்டாடிய நமது அருமை மூத்தப்போதகர் **Rev.VJ.பாலஸ்** அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்


ஹாய் குட்டிஸ்.. எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? எல்லாரும் ஆரோக்கியமாய், பாதுகாப்பாய் இருப்பீர்கள் என கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். உங்களுக்காக ஜெபிக்கிறேன். இந்த ஊரடங்கு காலத்தில் சிறுவர்களுக்கு படிப்பின் மீது ஆர்வம் குறைவதாகவும், ஆன்லைன் க்ளாஸ், ஆன்லைன் விளையாட்டு என வீட்டிற்குள்ளேயே முடங்கி போயிருப்பதால் பல சிறுவர்கள் மன அழுத்தத்தினால் பாதிக்கப்படுவதாகவும் சரீர உபாதைகளும் ஏற்படுவதாகவும் செய்திகள் கிடைத்துள்ளது. ஆகவே உங்கள் சரீரத்தையும், மனதையும் ஆரோக்கியமாக வைத்திருக்க மறவாதிருங்கள். ஓக்கே.. இந்த மாத கதை கேட்க ரெடியா? கவனமா கேட்கனும்.

பெற்றோரின் வார்த்தையை மதிக்காத இளம் வாலிபன் குமார். அவன் தன் நண்பர்களோடு சேர்ந்து ஊரடங்கில் வெளியே சுற்றும்படி தன் நவீன ரக பைக்கில் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த தனது மற்றொரு நண்பனை ஏற்றிக்கொண்டு அங்கும் இங்கும் சென்று, ஆங்காங்கே நின்று அரட்டையடித்து கொண்டிருந்தார்கள். இருட்டு தென்பட இருவரும் அவரவர் வீட்டிற்கு சென்றனர். இரவு நேரம் தூங்க முடியாதபடி குமாருக்கு இருமல் ஏற்பட்டது. பின் வேறு சில அறிகுறிகளும் தென்பட்டது. இரண்டு நாளுக்கு பின் விபரம் அறிந்தவர்கள் அரசு மருத்துவமனைக்கு தகவல் தெரிவிக்கவே, 108 ஆம்புலன்ஸ் விரைந்து வந்து அவர்கள் வீட்டை முற்றுகையிட்டது. அனைவரையும் பரிசோதனைக்காக அழைத்து சென்றனர். ரிப்போர்ட்டில் குமாருக்கும் அவனது தாய்க்கும் கொரோனா இருப்பது உறுதிசெய்யப்பட்டது. வெளிநாட்டிலிருந்து வீடு திரும்பிய நண்பன் மூலமாக குமாருக்கும், குமார் மூலம் அவனது தாய்க்கும் இந்த தொற்று பரவியுள்ளதை உறுதிசெய்து, மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்தனர். இறுதியில் அந்தோ பரிதாபம்... ஆம்! சில நாட்களுக்குள் அவனது அம்மா இந்த வைரஸ் தொற்றினால் சிகிச்சை பலனின்றி மரித்துப்போனாங்க.. விஷயம் கேள்விப்பட்டு குமார் கதறினான். என் அம்மா எவ்வளவோ புத்திமதி கூறியும் நான் கேட்காமல் வெளியே போய் சுற்றி என் அம்மாவை பறிகொடுத்துவிட்டேனே... என ஓவென கண்ணீர் விட்டு புலம்பினான்.

அன்பான தம்பி தங்கச்சி.. இந்த ஊரடங்கு ஊர் சுற்றுவதற்கு அல்ல, நம் உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்கத்தான் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே ரொம்ப கவனமாயிருங்க.. வைரஸ் எனப்படும் விஷக்கிருமிகளை நம்மால் சாதாரணமாகப் பார்க்க முடியாது. மைக்ரோஸ்கோப் மூலம் அதன் உருவத்தை பெரிதுபடுத்திப்பார்க்கலாம். கண்ணுக்குத் தெரியாத இந்த நுண்கிருமிகள் வெளியே இருக்கும்வரை அவற்றால் ஒன்றும் செய்ய இயலாது. ஆனால், தப்பித்தவறி உடலுக்குள் சென்றுவிட்டால், அது மனிதனை பாடாய்படுத்தி விடும். உடலில் இருக்கும் நோய் எதிர்ப்பு சக்திக்கான ஜீவ அணுக்களை அழித்துவிடும். மூச்சு விடுவதில் சிரமத்தை ஏற்படுத்திவிடும். இத்தகைய வைரஸ் உடலுக்குள் சென்றுவிட்டால் பலசாலியும் பலவீனன் ஆகிவிடுவான். ஆகவே தான் மூக்கும் வாயும் மூடியிருக்கும்படி மாஸ்க் அணிய சொல்லுறாங்க..

இந்த விஷக்கிருமியைப் போன்று இன்னொரு வைரஸ் இருக்கிறது. அது சாத்தானின் தூண்டுதலால் உருவாகும் வைரஸ். இந்த வைரசுக்கு 'பாவம்' என்று பெயர். நம்மையும் அறியாமல் நமக்குள்ளே நுழைந்து நம் ஆத்துமாவை அது சாகடித்து விடும். 'கீழ்ப்படியாமை' என்ற சிறிய பாவமே ஆதாம், ஏவாளின் ஜீவனை அழித்துவிட்டது. சிம்சோன் என்னும் பெலசாலியை 'இச்சை' என்னும் பாவம் தலைகுனிய வைத்துவிட்டது. 'பொய்' என்னும் பாவம் அனனியா சப்பிராள் என்னும் தம்பதியரை அழித்துவிட்டது. இன்னும் ஏராளமானோர் இந்த பாவம் என்னும் வைரஸினால் அழிந்து போயிருக்கின்றனர். கொரோனா வைரஸை விட இது கொடிய வைரஸ். அதிர்ச்சியாக இருக்கா.. உண்மையை தான் சொல்கிறேன். கொரோனா வைரஸ் சரீரத்தை மட்டுமே அழிக்க வல்லமை கொண்டது. ஆனால் இந்த வைரஸ் உங்கள் ஆத்துமாவையும் அழிக்கும் சக்தி கொண்டது.

கொரோனா வைரஸை அழிக்க தடுப்பூசிகள் கண்டுபிடிக்கும் பணியில் உலக நாடுகளெல்லாம் போராடி கொண்டிருக்கிறது. இது போல பாவம் என்னும் வைரஸை அழிக்க வழியிருக்கிறதா? நிச்சயமாக இருக்கிறது. 'தேவனுடைய வார்த்தைகளால் நம்முடைய இருதயத்தை நிரப்பிக்கொள்ளுகிறபோது அந்த வார்த்தைகள் பாவம் என்ற வைரசுக்கு எதிராக நின்று செயல்படும். இயேசுவின் இரத்தம் நம் இதயத்தை சுத்திகரிக்கும். நமக்குள் வேதவசனம் என்னும் எதிர்ப்பு சக்தி இல்லாமல் போகும்போது பாவம் நம்மை மேற்கொண்டு விடும்.

ஆம்... தேவனுடைய வார்த்தைகளைப் பின்பற்றுவதும், அவற்றை மனதில் நிலைநிறுத்திக் கொள்வதுமே பாவம் என்னும் கொடிய வைரஸ் கிருமிகளில் இருந்து உங்கள் ஆத்துமாவை காப்பாற்றும். ஆகவே உங்கள் மனதை கறைபடுத்தும் காரியங்களுக்கு இடம் கொடுக்காமல் நன்றாக வேதம் வாசியுங்கள்.. மனப்பாடம் செய்யுங்கள்.. இதயத்தை வசனத்தால் நிரப்புங்கள்.

பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன் (ரோமர் 6:23).

சரீரத்தை தூய்மையாக வைப்பது மட்டுமல்ல, நம் ஆத்துமாவையும் தூய்மையாக வைத்திருப்போம். கொடிய வைரஸிடமிருந்து (கொரோனா/பாவம்) நம்மையும் நம் சமூகத்தையும் காத்துக்கொள்வோம். இந்த சிறுவர் பகுதி பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். இது குறித்த உங்கள் மேலான கருத்துக்கள் மற்றும் சாட்சிகளை 97503 81784 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் உங்களை சந்திக்கிறேன்.. Stay home... Stay Safe... God Bless you.

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# எப்படி தீர்மானம் எடுக்கக்கூடாது?

### *How Not To Make Decision*


**Rev. R. நெல்சன் ஞானகுமார்**

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.


“மனுஷனுடைய மதியீனம் அவன் வழியைத் தாறுமாறாக்கும்; என்றாலும் அவன் மனம் கர்த்தருக்கு விரோதமாய்த் தாங்கலடையும்” (நீதிமொழிகள் 19:3).

ஒவ்வொரு நாளும் நாம் எதை தீர்மானிக்கிறோமோ, அதைத் தான் நாம் செய்கிறோம். நாம் எதைச் செய்கிறோமோ, அதன் விளைவைத் தான் அனுபவிக்கிறோம். ஆகவே நாம் தீர்மானம் எடுக்கும்போது கவனமாயிருக்க வேண்டும். சில நேரங்களில் சொற்ப மதியீனத்தால், சில தவறான தீர்மானங்களை எடுத்து வாழ்நாள் முழுவதும் அதன் தீங்கை அனுபவிக்கிறார்கள். எனவே ‘**எப்படி தீர்மானம் எடுக்கக்கூடாது**’ என்ற இந்த செய்தி உங்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும். தொடர்ந்து படியுங்கள்.

**1. உடனடியாக கிடைக்கிற சந்தோஷத்திற்காக தீர்மானம் எடுக்கக்கூடாது** (பிரசங்கி 7:8)

ஒரு தீர்மானம் எடுக்கும்போது உடனே என்ன கிடைக்கும் என்பதைவிட, அதனுடைய பின் விளைவுகள் என்னவாயிருக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். **உதாரணம்...**

● **லோத்து**-(ஆதியாகமம் 13:10,11)-நீர்வளம் பொருந்திய இடத்தை பார்த்தவுடன் அதை தெரிந்துகொண்டான். ஆனால் அதனாலுண்டான கீழ்க்கண்ட பின் விளைவுகளை சிந்திக்காமற்போனான்.

➤ யுத்தம் வந்தது (14:11), நாடு கடத்தப்பட்டான் (14:12).

➤ இருதயத்தில் வாதிக்கப்பட்டான் (2 பேதுரு 2:7,8).

➤ சேர்த்து வைத்த எல்லாவற்றையும் விட்டுவிட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது (19:15,16,24,25), மனைவி உப்புத்தூண் ஆனாள் (19:17,26).

➤ தகாத உறவு (19:32,33).

● **ஏசா** (எபிரெயர் 11:16)

**2. அவசரப்பட்டு தீர்மானம் எடுக்கக்கூடாது** (நீதிமொழிகள் 19:2)

சிலர் தவறான தீர்மானங்களை எடுத்துவிட்டு, பின் பல கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள். இதனால் காலமெல்லாம் எடுத்த தவறான தீர்மானத்தை எண்ணி நொந்துகொண்டேயிருப்பார்கள். மனம் பதறி அவசரப்பட்டு செய்யும்போது, தவறு நடக்க வாய்ப்பிருக்கிறது. எனவே போதுமான கால அவகாசம் எடுத்துக்கொள்ளுங்கள். **உதாரணம்...**

● **சவுல்** (1சாமுவேல் 13:8,9)-இன்னும் சற்று பொறுத்திருப்பானேயானால், சாமுவேல் வந்திருப்பார். பலி செலுத்தியிருப்பார். சவுலை ஆசீர்வதித்திருப்பார். ஆனால் சவுலோ மக்களை திருப்திப்படுத்துவதற்காக அவசரப்பட்டு பலி செலுத்திவிட்டான். இதனால் அவனுடைய ராஜாங்கத்தையே இழக்க வேண்டியதாயிற்று. முடிவில் தற்கொலை பண்ணிக்கொண்டான்.

● **இஸ்ரவேல் ஜனங்கள்** (யாத்திராகமம் 32:1,28).

**3. அதிக தாமதமாகவும் தீர்மானிக்கக்கூடாது** (1 இராஜா. 22:5).

சரியான நேரத்தில் எடுக்கும் சரியான தீர்மானமே வெற்றியைக் கொண்டு வரும். காலம் கடந்த பிற்பாடு தீர்மானம் எடுப்பதும் பிரயோஜனமற்று போய்விடும்.

● **புத்தியில்லாத கன்னிகைகள்:** (மத்தேயு 25:8,9) மணவாளன் வந்த பிற்பாடு எண்ணெய் வாங்க தீர்மானித்தார்கள். கதவு அடைக்கப்பட்டது. கைவிடப்பட்டார்கள். முன் கூட்டியே தீர்மானித்திருந்தால், எண்ணெய் ஏற்பாடு செய்திருக்கலாம்.

● **யூதாஸ்காரியோத்** – மத்தேயு 27:3

**4. உணர்ச்சிவசத்தில் தீர்மானிக்கக் கூடாது** – (நீதிமொழிகள் 21:5)

கோபம், கவலை, பயம், அதிக சந்தோஷம் போன்ற உணர்ச்சி மேலோங்கியிருக்கும்போது, தவறான தீர்மானம் எடுத்துவிட வாய்ப்பிருக்கிறது. அதாவது உணர்ச்சிகளே நம்மை நடத்துகிறதாக இருக்கிறது. இந்த நேரத்தில் புத்தி வேலை செய்யாது. பின் வருத்தப்படுவோம். **உதாரணம்...**

● **சிறைச்சாலைக்காரன்:** கைதிகள் ஓடிவிட்டார்களோ என்று நினைத்து, என்னவாகுமோ என்று மனம் பதறி, தற்கொலை செய்து கொள்ளப்பார்த்தான். ஆனால் உண்மையில் பவுலும் சீலாவும் தப்பித்து ஓடவில்லை.

● **யெப்தா:** (நியாயாதிபதிகள் 11:30,31).

**5. கலந்தாலோசிக்காமல் தீர்மானம் எடுக்கக்கூடாது** (நீதிமொழிகள் 15:22; 18:2; 11:14)

சில நேரங்களில், நாம் எடுக்கும் தீர்மானங்களில் இருக்கும் தவறுகள் நமக்கு தெரியாமல் போய்விட வாய்ப்பிருக்கிறது. எனவே நம்மை நேசிக்கிற, நம்மேல் அக்கறையுள்ள ஒரு சிலரிடமாவது, கலந்தாலோசிக்க வேண்டும். அப்பொழுது நம் கண்களுக்கு மறைவாயிருக்கிற தவறுகள் பிறர் மூலமாக சுட்டிக்காட்டப்பட வாய்ப்பிருக்கிறது. தேவைக்கதிகமாக கலந்தாலோசிப்பதும், தவறான நபர்களிடம் கலந்தாலோசிப்பதும், யாவரிடமும் கலந்தாலோசிக்காமலிருப்பதும் தவறு. **உதாரணம்....**

● **அப்சலோம் :** (2 சாமுவேல் 17:7,14) தவறான தீர்மானம் எடுத்ததினால் விளைவு என்ன? ஒரு மனுஷன் எடுத்த தவறான தீர்மானம் 20,000 பேர் யுத்தத்தில் சாக காரணமாக மாறிற்று.

● **ரெகொபெயாம்** (1 இராஜாக்கள் 12:13)

**6. மனிதர்களை பிரியப்படுத்த தீர்மானம் எடுக்கக் கூடாது**

ஒரு தவறான தீர்மானம் எடுப்பதினால், ஒருவேளை சில மனிதர்களை சந்தோஷப்படுத்திவிடலாம். ஆனால் நீங்கள் எடுத்த தவறான தீர்மானத்தின் தீமையான விளைவுகளை சந்திக்கும்போது, அவர்கள் உங்கள் கூட இருக்க மாட்டார்கள். **உதாரணம்...**

● **பிலாத்து** (மத்தேயு 27:26) யூதர்களை பிரியப்படுத்த, இயேசுவை சிலுவையிலறைய சம்மதித்தான்.

● **பேலிக்ஸ்:** (அப்போஸ்தலர் 24:27).

**7. வேத வசனத்திற்கு முரணாக தீர்மானம் எடுக்கக்கூடாது**

வேத வசனமே வேத சித்தம். வேத வசனத்திற்கு எதிராக சொப்பனமோ, தீர்க்கதரிசனமோ, தரிசனமோ... வந்தாலும் அது தவறுதான். **உதாரணம்...**

● **ஊசா** (1 நாளாகமம் 13:7,10;15:2,13) தேவனுடைய பெட்டியைத் தூக்குவதற்கு, ஆண்டவர் குறித்திருக்கிற நியதியை விட்டுவிட்டு ரதத்தின் மேல் கொண்டு வந்தார்கள். இதன் விளைவாக உயிரே போயிற்று.

● **நகோமி** (ரூத் 1:2: உபாகமம் 23:3).

# நற்கிரியைகள் குறித்து வேதம் என்ன கூறுகிறது?

1. நற்கிரியைகளைச் செய்வதற்கு கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் (எபே. 2:10).
2. நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் (தீத்து 3:8).
3. நற்கிரியைகளாகிய கனிகளை கொடுக்க வேண்டும் (கொலோ. 1:10).
4. நற்கிரியைகளைச் செய்யப்பழக வேண்டும் (தீத்து 3:14).
5. நற்கிரியைகளால் நிறைந்திருக்க வேண்டும் (அப். 9:36).
6. நற்கிரியைகளைச் செய்வதற்க்குப் பக்தி வைராக்கியம் இருக்க வேண்டும் (தீத்து 2:14).
7. எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (2 தீமோ. 3:17).
8. நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாய் இருக்க வேண்டும் (1 தீமோ 6:18).
9. நற்கிரியைகளில் ஸ்திரப்பட வேண்டும் (2 தெச. 2:17).
10. நற்கிரியைகளில் பூரணராக வேண்டும் (எபி. 13:21).
11. எந்த நற்கிரியையும் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும் (2 தீமோ. 2:21, தீத்து 3:1).
12. நற்கிரியைகளில் பெருக வேண்டும் (2 கொரி. 9:8).
13. நற்கிரியைகளை செய்வதற்கு ஒருவரையொருவர் ஏவ வேண்டும் (எபி. 10:24).
14. மற்றவர்களுடைய புகழ்ச்சியைப் பெறும்படி நற்கிரியைகளைச் செய்யக்கூடாது (மத். 6:1-18).
15. தேவபக்தியுள்ள ஸ்திரீகள் நற்கிரியைகளை வெளிப்படுத்த வேண்டும் (1 தீமோ.2:10).
16. தேவன் உங்கள் நற்கிரியைகளை நினைப்பார் (நெகே. 13:14; எபி. 6:9,10).
17. உங்கள் கிரியைகள் நியாயத்தீர்ப்பு நாளிலே வெளிப்படும் (பிரசங்கி 12:14; 2 கொரி. 5:10).

**நாம் செய்ய வேண்டிய சில நற்கிரியைகள்**

1. திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் விசாரித்தல் (யாக்.1:27; சங். 68:5; யோபு 29:13).
2. பசியாயிருப்பவர்களுக்கு போஜனங்கொடுத்தல் (மத் .25:35).
3. அந்நியர்களை உபசரித்தல் (மத். 25:35; எபி. 13:2; ரோமர் 12:13).
4. வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுத்தல் (மத். 25:35).
5. வியாதியஸ்தர்களைச் சந்தித்தல் (மத். 25:35; லூக்கா 4:40; யாக் .5:14,15) .
6. சிறைச்சாலைகளில் இருப்பவர்களை நினைவு கூறுதல் (மத்தேயு25:35; எபி. 10:34; 13:3).
7. ஏழைகளுக்கு உதவிக்கரம் நீட்டுதல் (1 தீமோ. 6:17-19; யோபு 29:12; நீதி.31:20).
8. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமத்தல் (கலா. 6:1,2).
9. ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துதல் (எபி. 3:12,13).
10. தேவனுடைய புண்ணியங்களை அறிவித்தல் (1 பேதுரு 2:9).

**மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத். 5:16)**



# Your children are not USELESS

**Rev. பெகின் சாமுவேல்**
(AGCM Director)

ஆண்டவரும், அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இதழ் மூலமாக உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

தங்கள் பிள்ளைகளை எதற்கும் பிரயோஜனமற்றவர்கள் என்று சில பெற்றோர்கள் நினைக்கின்றனர். படிப்பில் சிறந்து விளங்கினால்தான் சிறந்த குழந்தை என்ற தவறான எண்ணம் அநேக பெற்றோர்களிடம் இருப்பதன் விளைவு, பிள்ளைகளிடம் படிக்காவிட்டால் தங்களுடைய லட்சியத்தை அடையமுடியாமல், சமுதாயத்தில் பிரயோஜனமற்றவர்களாய் மாறி விடுவார்கள் என்ற விதையை விதைத்து விடுகிறார்கள். இந்நாட்களில் நம்மை அதிகமாய் அதிர்ச்சிக்குள்ளாக்கியது சமீபத்தில் நடந்தேறிய மாணவர்களின் தற்கொலைகள். தன்னால் NEET தேர்வில் தேர்ச்சியடையாவிட்டால் கனவை அடைய முடியாது. நம்முடைய வாழ்க்கையே அவ்வளவுதான் என்ற தவறான எண்ணம் அவர்களை தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் முடிவை எடுக்க வைத்துள்ளது. உங்கள் பிள்ளைகள் மேல் எதையும் திணிக்காதீர்கள். மாறாக அவர்கள் திறமைகள், தாலந்துகளை கண்டுபிடித்து அதில் அவர்கள் சிறந்து விளங்க உதவி செய்யுங்கள்.

வேதத்தில் நாம் வாசிக்கும்போது 2 தீமோ.2:21-ல் ...எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான் என்று கூறப்பட்டுள்ளது. எனவே எல்லாருமே ஏதோ ஒரு தனித்திறமைகளோடு பிரயோஜனமானவர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர்.

நமது வீட்டில் பல பாத்திரங்களை உபயோகப்படுத்துகிறோம். எல்லா பாத்திரங்களையும் நாம் ஒரே மாதிரி பயன்படுத்துவதில்லை. சில பாத்திரங்களை நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோம். சில பாத்திரங்கள் ஏதேனும் விசேஷமான நாட்களில் பயன்படுத்தப்படுகிறது. ஆண்டவர் உங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் பயனுள்ள பாத்திரமாக இருக்கும்படி பயன்படுத்த விரும்புகிறார்.

நாம் பிரயோஜனமுள்ளவர்களாக இருக்க தேவன் நமக்கு என்னென்ன காரியங்களை செய்திருக்கிறார் என்று வேதத்திலிருந்து பார்ப்போம்

## 1.தேவ கிருபை (Your children are carrying the grace of God)

எபே.4:7-ல் சொல்லபட்டபடி கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்கத் தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது.

பவுலினிடத்தில் தேவன் கொடுத்த கிருபையை வைத்து ஒரு சாம்ராஜ்யத்தையே (கிறிஸ்துவின்) கட்டி எழுப்பினார். எனவே உங்கள் குழந்தைகள் பிரயோஜனமற்றவர்கள் அல்ல. அவர்களுக்குள்ளே தேவ கிருபை இருக்கிறது. தேவகிருபையின் முன் நாம் படித்து பெற்றிருக்கும் பட்டங்களும், பதவிகளும் பெரியது அல்ல. இவைகள் ஒன்றும் இல்லாமல் தேவ கிருபையினால் ஒரு மனிதனைக் கொண்டு நினைத்து பார்க்காத அளவு கர்த்தர் பெரிய காரியங்களை நடப்பிக்க முடியும். நாம் வேதத்தில் பார்க்கிற, தேவன் இன்று பயன்படுத்துகிற அநேக ஊழியர்களும், பரிசுத்தவான்களும் தேவகிருபையை அவர்கள் சுமப்பதனால் அசாதாரணமான காரியங்களை செய்கிறார்கள்.

**2. தாலந்து (Your children are carrying the talents given by God)**

மத்.25:14ல் வாசித்தால் அவனவனுடைய திறமைக்குத்தக்கதான தாலந்து பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது என்று பார்க்கிறோம். Antonio Stradivarius என்ற இத்தாலிய இளைஞனுக்கு இசையின் மீது அலாதி பிரியம். அவனுடைய இந்த ஆசையினால் அவன் பாடகர்குழுவில் இணையலாம் என்று நினைத்து சேர்ந்த போது அவனுடைய கீச்சுக்குரல் பாடல் பாடுவதற்கு தகுதியானது அல்ல என்று சொல்லிவிட்டார்கள். தன்னுடைய தீராத ஆசையினாலும், அவனுடைய நண்பனின் தூண்டுதலினாலும் அவன் சில இசைக்கருவிகளை வெட்டி உருவாக்கலாம் என்று நினைத்து உருவாக்கியதின் விளைவுதான் இன்று நாம் பயன்படுத்தும் வயலின் என்ற இசைக்கருவி. இவர் இறப்பதற்கு முன் 1500 வயலினை உருவாக்கினார். என்னால் பாட முடியவில்லை என்று விடவில்லை. தனக்கு தேவன் கொடுத்த தாலந்தை உபயோகிக்க விரும்பினான்.

**3. நன்மை (Your children are carrying the goodness of God)**

சங்.103:5-ல் நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார் என்று வாசிக்கலாம். தாவீது நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும் என்று கூறுகிறான். தேவன் ஒருவருக்கும் தீங்கு செய்கிறவர் அல்ல. நம்முடைய வாழ்வில் சில சமயங்களில் நன்மைக்கு பதிலாக தீமைகள் நடப்பது போன்று தெரிந்தாலும், தேவன் பொல்லாங்கு செய்ய மாட்டார். எனவே காத்திருங்கள்.


உங்கள் பிள்ளைகள் ஒருவரும் பிரயோஜனமற்றவர்கள் அல்ல. அவர்கள் தேவ கிருபையையும், தேவன் கொடுத்திருக்கும் தாலந்தையும், தேவன் அளித்திருக்கும் நன்மையையும் சுமந்து கொண்டிருக்கிறார்கள். அதை அவர்களுக்கு உணர்த்துங்கள். கர்த்தருடைய வழியில் நடத்துங்கள். பிரயோஜனமுள்ளவர்களாக மாற்றுங்கள். கர்த்தர் தாமே உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

இந்த மாதத்தில் நடைபெற இருக்கும் **Bible Champions '20** வேதவினா போட்டிக்காக ஜெபியுங்கள். உங்கள் பிள்ளைகளை இதில் பங்குபெற வையுங்கள். உங்கள் சபைகளுக்கு order form அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அதில் உங்கள் பிள்ளைகளை சேர்க்க இன்றே விரைந்து செயல்படுங்கள்.

# ஆபிரகாம் லிங்கன்

**விடாமுயற்சியின் எடுத்துக்காட்டு!**

மனித வரலாற்றில் விடாமுயற்சிக்கு
மிகப்பெரிய எடுத்துக்காட்டாக இருப்பவர் ஆபிரகாம் லிங்கன்.



1809 – ம் ஆண்டு பிப்ரவரி 12-ம் தேதி ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தார்.

1816 – தன் குடும்பத்தைக் காப்பாற்றக் கடுமையாக உழைத்தார்.

1818 – தாயார் மரித்துப் போனார்கள்.

1831 – தான் செய்த தொழிலில் தோல்வி.

1832 – வேலையை இழந்தார். சட்டக் கல்லூரிக்குப் படிக்கச் சென்றார். அங்கு இடம் கிடைக்கவில்லை.

1833 – தொழில் ஆரம்பிக்கத் தன் நண்பனிடத்தில் கொஞ்சம் கடன் வாங்கினார். அந்த வருட இறுதியில் திவாலாகிவிட்டார். கடனைத் திருப்பிச் செலுத்த 17 வருடங்கள் ஆனது.

1834 – சட்டமன்றத் தேர்தலுக்கு மறுபடியும் நின்று வெற்றி பெற்றார்.

1835 – திருமணத்திற்கென்று நிச்சயிக்கப்பட்ட அழகான பெண் மரித்துப் போனாள்

1836 – மனம் உடைந்து பெலவீனப்பட்டு 6 மாதங்கள் படுக்கையில் கிடந்தார்.

1838 – சட்டமன்ற சபாநாயகராக வர முயற்சித்தார். ஆனால் தோல்வியடைந்தார்.

1840 – வாக்காளராக முயற்சித்தார், தோல்வி அடைந்தார்.

1843 – காங்கிரஸ் கட்சியில் நின்று தோற்றுப்போனார்.

1846 – காங்கிரஸ் கட்சியில் நின்று வெற்றிபெற்று வாஷிங்டன் சென்று தன் பணியை நன்றாகச் செய்தார்.

1848 – காங்கிரஸ் தேர்தலில் மறுபடியும் நின்று தோற்றுப்போனார்.

1849 – தன் சொந்த மாநிலத்தில் பண்ணை அலுவலராக வேலை தேடினார். கிடைக்கவில்லை.

1845 – அமெரிக்க ஐக்கிய தேசத்தின் செனட்டிற்குப் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார்.

1856 – துணை ஜனாாதிபதிக்காகப் போட்டியிட்டார். 100 ஓட்டுகள் கூட கிடைக்கவில்லை.

1860 – அமெரிக்க ஐக்கிய தேசத்தின் 16வது ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

**சோர்ந்து போகாதே! விட்டுவிடாதே! தொடர்ந்து முன்னேறு!**
**வெற்றி நிச்சயம்! வாழ்த்துக்கள்!**

## போட்டி எண் : 83 (சரியான விடை)

1.பெலத்தியா;|2.16:44;|3.இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரும்; | 4.இருதயத்தையும், ஆவியையும்; | 5.14:14; |6.தன்மூசுக்காக; | 7.சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில்; | 8.புலம்பல்களும், தவிப்பும், ஐயோ என்பதும்;|9.390 நாட்கள்;|10.நீ சுத்தம் பண்ணப்படாத தேசம், கோபத்தின் காலத்தில் மழை பெய்யாத தேசம்; |11. நரகலான விக்கிரகங்களால்;|12.பார்வோன்;|13.பூசி;|14.எசேக்கியேல்;|15.கர்த்தருடைய மகிமையின் பிரகாசத்தினால் நிரம்பிற்று; | 16.பெத்யெசிமோத், பாகால் மெயோன், கீரியாத்தாயீம்; | 17.தூரத்திலிருக்கிறவன்,சமீபத்திலிருக்கிறவன்;|18.சமாரியா, எருசலேம்; |19.ஆதரவு கோலை; |20.பட்டயம்; |21.வனாந்தரங்களிலுள்ள நரிகளுக்கு; 22.பாவஞ்செய்கிற; | 23.வெள்ளியை; |24 நாட்கள், தரிசனம் எல்லாம்; |25 பொன்;

---

## போட்டி எண் : 83 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**: ராதாமணி; பியூலா; கோகிலா; மயில்; S.ஜெயா; சுபா; குளோரி; மாது; சித்ரா; டோரா; A.மஞ்சு; மாரிமுத்து; கனகவல்லி; பொம்பி; S.முத்துலெட்சுமி; E.கலா; கந்தையா; T.கலா; சாந்தி; ரம்யா; G.முத்துலெட்சுமி; கிரிஜா; செல்வி; மகேஸ்வரி; எஸ்தர்கலா; | **இறச்சகுளம்** : நளினா சாலினி; ராதிகா; கவிதா ஸ்ரீ; ஷோபா; ஜேஸ்மின்; எஸ்தர்; ஜெஸி; மோனிஷ்; எஸ்தர் புனிதலதா; தஷிகா; கலா; அமலா வேணி; கனகமணி; |**ஸ்ரீ வில்லிபுத்தூர்** : பாஞ்சாலி; சத்யா; நித்தியா; நாச்சியார்; குளோரி; அனிதா; ஆபிரகாம்; மெசி; கிறிஸ்டி பிரியா; தேவபிரியா; |**இடப்பாடி** : அஞ்சலி; லீதியாள்; பிரியா; ரூத்; ஜோசப் மேரி; சோபியா; வசந்தி;| **தேனி** : திரவியச்செல்வி; கிருபா; எஸ்தர்; ராகேல்; பூமணி ஜான்சி; செலீனா; தனம்; |**திருநின்றவூர்** : எழிலரசி; கேத்ரின்; சுமதி; அம்மு; மார்த்தாள்; புவனேஸ்வரி;| **தூத்துக்குடி**: சகாயமேரி; கிப்டா மேரி; எஸ்தர் செல்வராணி; புரூசிமா; சில்வெஸ்டர்;|**ஆறுமுகநேரி**:கஸ்தூரி;எஸ்தர் வெண்ணிலா;பிரேமா; சாந்தி; |**கிச்சிப்பாளையம்** : சாரோன் ஜெய ரூபி; எஸ்தர்; கிறிஸ்டல் ஜான்; ஜோஸ்பின் கிரேஸ்மேரி; |**நெல்வாய்** : ஜெபகணி; மலர்விழி; வெஸ்லி விஜயகுமார்; பௌலின் சந்தியா; |**ஒட்டப்பிடாரம்** : சுப்ரமணியன்; சரஸ்வதி; பானுமதி; இஸ்ரவேல் கிருபாகரன்; |**திருச்சி** : மேரி சுஜாதா; சாந்தி; கிறிஸ்டி மகாலெட்சுமி;| **நாசரேத்** : தாசன் மோசஸ்; எஸ்தர்; மெர்சி; |**சென்னை** : மஞ்சுளா; மெர்லின் ஹெலன் பிரீத்தியா; ஹெப்சிபா; |**தர்மபுரி** : ரூத், மாதாம்மாள்; மெல்வினா ஜோயா பிரிஸ்சில்லா; |**அச்சிறுப்பாக்கம்** : இலக்கியா; பிரியதர்ஷினி; திரேசா;| **திசையன்விளை** : ஜெயசீலி; செல்வபாக்கியம்; |**வந்தவாசி** : தயா பிரெய்ஸி; அபிஷா சுமதி; |**ஆலங்குளம் (வி)** : ரெஜினா சாரு; கிருபா; **ஆண்டிபட்டி** : தேவபாக்கியம்; புளோரியா; **கவர்கல் எஸ்டேட்** : கோபிகா; சரஸ்வதி; **புதுக்கோட்டை** : மின்னல்கொடி; லலிதா; |**கொட்டிவாக்கம்** : பெனிட்டா; செல்வி; |**K.T.C.நகர்** : பிரேமா ரூத்; சில்வியா; |**உக்கிரன் கோட்டை** : குழந்தை தெரசம்மாள்;|**கோவை** : மேரி டென்சில்; |**சிம்மக்கல் (ம)** : மேரி; |**வத்ராப்:** ஜெபராணி; |**ஆம்பூர்** : கிரிஜா சத்யா; |**நாகர்கோவில்** :பிரியா; |**மதுரை** : மேரி; | **திருநெல்வேலி** : இவாஞ்சலின் சாரோன்ரோஸ்; **ஆண்டாள்புரம் (ம)** |: கனகவல்லி; |**தென்காசி** : சீதாலெட்சுமி; |**கொங்கந்தான்பாறை** : சந்திரா; |**கோவில்பட்டி** : வால்டர்சிங்; |**காளையார்கோவில்** : அருளானந்தம்; |**திருவள்ளூர்** : ரோஸ்லின் மேரி; |**கம்பம்** : புஷ்பலீலா; **பெங்களூர்** : தேவபிரியா; |**திருப்பத்தூர்** : ரூபி; |**ஆழ்வார்குறிச்சி** : ஹறிலீலா; |**கூடலூர்** : சுகிர்தா; |**ஆசாரிப்பள்ளம்** : ஏஞ்சல்குமார்; |**ஏர்காடு** : டேவிட்; |**குற்றாலம்** : வேளாங்கனி; |**பேரையூர்** : அன்னாள்; |**கடாட்சபுரம்** : ரேவதி; **வெள்ளோடு**; சார்லட் ; |**பாளையங்கோட்டை** : சாந்தகுமாரி; |**பெருந்துறை** : கெத்சியாள்; |**நீலகிரி** : சார்லஸ், **பெருங்குளம்** : பீபி ஹெக்கினா; |**பேயன்விளை** : ஜாய்ஸ் மேரி; |**காசிமேஜர்புரம்** :ரூத்; |**பழையகாயல்** : எலிசபெத்; **வில்லியனூர்** : ஷீபா; |**சாத்தூர்** : கீதா வசந்தகுமாரி; |**கோனம்** : மரியநேசம் ; |**கடையநல்லூர்** : நளினி; |**தஞ்சாவூர்** : விஜி; |**இராமன்புதூர்** : லீதியாள்;| **மதுராந்தகம்** : பியூலா; |**வடக்கு ஆத்தூர்** : மகேஸ்வரி.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் – 84

**எசேக்கியேல் (26–48) இருப்பிடத்துடன் விடை எழுதவும்**

1. கேருபீனுக்கும், கேருபீனுக்கும் நடுவாக ஒவ்வொரு -------- இருந்தது.
2. -------- ஒருவனாயிருந்து தேசத்தைச் சுதந்தரித்துக் கொண்டான்.
3. இந்த எலும்புகள் -------- அனைவருமே.
4. நீ -------- வெறுக்காதபடியினால் -------- உன்னைப் பின் தொடரும்.
5. -------- மகா வேதனை அடையும்.
6. பிராகாரத்து ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொரு -------- இருந்தது.
7. நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை --------.
8. என் தாசனாகிய -------- அவர்கள் நடுவில் அதிபதியாயிருப்பான்.
9. தானியேலைப் பார்க்கிலும் நீ --------
10. அந்த நாள் முதல் நகரம் -------- என்னும் பெயர் பெறும்.
11. என் நதி என்னுடையது -------- என்று சொல்லுகிற பெரிய முதலையே.
12. உன் பலமான -------- தரையில் விழுந்து போகும்.
13. அவருடைய -------- பூமி பிரகாசித்தது.
14. -------- பெருகுகிறது போல் அவர்களில் -------- பெருகப்பண்ணுவேன்.
15. -------- நடுமையத்திலே உன் தாபரம் இருக்கிறது.
16. அதிபதி -------- போஜனம் பண்ணும்படி இதில் உட்காருவான்.
17. தண்ணீர் குடிக்கும் சகலமரங்களும் -------- அடைந்தன.
18. அந்த நகரத்துக்கு -------- என்று பெயரிடப்படும்.
19. நீ -------- உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் --------
20. தண்ணீர் -------- , -------- நதியுமாயிருந்தது.
21. சுமுத்திரையான -------- சுமுத்திரையான -------- சுமுத்திரையான --------- உங்களுக்கு இருக்கக்கடவது.
22. நூறு முழ நீளத்துக்கு முன்னே -------- இருந்தது.
23. அவர்கள் ஆறுகளை -------- ஓடப்பண்ணுவேன்.
24. அந்த தளவரிசையின் மேல் -------- இருந்தது.
25. அதன் தண்ணீர் --------

| | |
|---|---|
| விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 05.12.2020 | சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும். |



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**"பரிபூரண ஜீவன்"**

**Sis.சாந்தி பால், W/o. Rev. பால் பிரகாசம்**

A.G. Church, 23- மெயின்ரோடு,செங்கோட்டை - 627 809

செல்: 88077 18002

AGCM Presents

ASSEMBLIES OF GOD

AGCM

# Bible CHAMPIONS ONLINE EXAM 2020

2020 NOV 22 SUNDAY

REGISTER NOW! Rs.25/-

## Portions

| SEC | AGE | CHAPTERS | MARKS | EXAM TYPE |
|---|---|---|---|---|
| A | 6 Yrs | No Online Exam | - | - |
| B | 7-9 Yrs | Luke 1-8 &19-24 | 75 | Objective |
| C | 10-13 Yrs | Luke 1-24 | 100 | Objective |
| D | 14-17 Yrs | Luke 1-24 | 100 | Objective |

FIRST PRIZE

SECOND PRIZE

EXAM TIME

3 PM - 4 PM

பதிவுக்கட்டணம் அனைத்து பிரிவிற்கும் Rs.25/-* மட்டும்
பதிவு செய்ய கடைசி நாள் – 20.10.2020
ஆங்கிலத்தில் படிப்பவர்கள் NKJV மொழிபெயர்ப்பை பயன்படுத்தவும்

**முக்கிய குறிப்பு:**

- அனைத்து பிரிவிற்கும் ஆன்லைன் மூலம் மட்டுமே தேர்வு நடைபெறும்
- இந்த வருடம் மட்டும் பிரிவு A பிள்ளைகளுக்கு தேர்வு நடைபெறாது
- ஆன்லைன் தேர்வு நடத்துவதற்கான வழிமுறைகள் பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

For more Information

REV.BEGIN SAMUEL +91 9944952388
REV.MELVIN MANESH +91 9843722281
REV.DANIEL RATHNARAJ +91 8056679025
REV.EBENEZER +91 9884699087

email:agcmtn@gmail.com web:www.agcmtn.com

Registered News Paper Regd. No. 8206 / 62




ஊழியப் பாதையில் 60 ஆண்டுகள் - Rev. V.J. பாலஸ்





BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165